

பொன்னி

மாதம் இருமுறை

ஆசிரியர்:
முருகு சுப்பிரமணியன்

க

பொருளடக்கம்

மலர் 3 இதழ் 1

NA-2

நாரா நாச்சியப்பன்
நக்கீரன்
ஏ. பி. சனர்த்தனம்
இளமைப்பித்தன்
வழிப்போக்கன்
சுலோசனை
வாணிதாசன்
தில்லை வில்லாளன்
வேத்தரசன்
அறிஞர் கா. அப்பாத்துரை
விசு. திருநாவுக்கரசு
சி. கே. இராதாகிருஷ்ணன்

ஆகியோரின் எழுத்தோவியங்கள்

திருவள்ளுவர் ஆண்டு 1980
ஆனித் திங்கள் 27-ம் நாள்

விலை அணு
10—7—4

வாரிசு?

பெரியார் வாழ்கெனப் பேரொலி எழுப்பித்
திராவிடம் வெல்கெனச் சேர்த்து முழக்கும்
போதெலாம் நெஞ்சம் பூரிப் படையும்!
முப்பது ஆண்டுகள் முழுவதும் பெரியார்
செப்பரும் உழைப்பால் திராவிடம் உயர்ந்தது!
பொருந்தாத் திருமணம், பொய்மதம், புராணம்,
இருந்தால் நாட்டில் இழிவே பெருகுமென்
றுரைத்தார்; தம்மிலே உணர்ந்தார் திராவிடர்;
பெரியார் காட்டும் நெறிவழிச் சென்றார்!

இலட்சியப் பாடல் இசைத்துக் கொண்டு
இன்பப் பயணம் போகுங் காலே
எதிரிலோர் குண்டுவீழ்ந் ததிர்வது போலே
எழுப தாண்டுகள் எய்திய பெரியார்
திருமணம் விழைகிறார், என்றவோர் செய்தி
கேட்டோம்; நெஞ்சம் ஆட்டங் கொண்டதே!
முப்பதே ஆண்டு முடிந்த அம்மையை
எழுப தாண்டுக் கிழவ ராய
தாங்கள் மணப்பது தகுமோ வென்றோம்.
திருமணம் எனது சொந்தக் கருத்தெனக்
கூறினர்; கொள்கையை மீறினர் பெரியார்!

ஊர் ஊராக ஓடி ஓடி
ஓயா தலேந்து பொருந்தாத் திருமணம்
கூடா தென்று கூறிய வெல்லாம்
எங்களுக் காகவா? தங்களுக் கல்லவா?
என்று கேட்கிறோம் இன்று நாங்களே!

மகப்பேறு வேண்டி மணங்காண்ப தாக
மதியில் லாதவர் பகர்வது கண்டோம்
அறிவிற் சிறந்த நீரும் வாரிசு
பெறுதற் கென்று பேசுந் திருமணம்
வியப்பை யல்ல; மயக்கந் தந்ததே!

ஓயா துறங்காது திராவிடர்க் குழைத்த
தாயா யிலங்கிய தங்கள் பொருளுக்
குரியார் திராவிடர் என்றேன் றுரைத்தால்
பெரியார் எனப்புவி பேசு மன்றோ?

வாரிசு வேண்டி மணியம்மை தோள்
சாரும் இழிவைத் தவிர்க்க வேண்டினோம்
உங்களைப் பழிக்கும் ஒவ்வொரு சொல்லும்
எங்களை வந்துருத் தீட்டி போலக்
குத்தி உளத்தைக் குடைவதால்
மெத்தவும் வேண்டினோம் இழிவின் மீள்கவே!

—நாரா நாச்சியப்பன்



தகாது! தவறு! வேண்டாம்!

பெரியார் ஈ. வே. இராமசாமி. இப்பெயருக்குத்தான் தமிழ் நாட்டில் எத்தனை மதிப்பு! பெருமை! ஒவ்வொரு தமிழர் வீட்டிலும் சொந்தப் பெயராகவன்றோ பெரியாரின் திருப் பெயர் பேசப்பட்டு வருகிறது!

காரணமென்ன? தோழர் வ. ரா. சொல்வதுபோல "ஸ்மரணையற்றுக் கிடந்த தமிழர்களின் உள்ளத்தை 'அடி தெரியும்படி' கலக்கிய பிரமாண்ட பாக்கியம் நாயக்கரைப் பெரிதும் சேர்ந்ததாகும்". நாட்டில் விழிப்பும் பகுத்தறிவுணர்வும் தன்மானக் கொள்கையும் நிலவுகின்றன என்றால் பெரியாரின் சொல்லும் எழுத்தும்தான் அதற்குக் காரணமென்பதை யாரும் மறுக்க முடியாது.

"புதிய அறம்பாட வந்த அறிஞன். நாட்டிற் படரும் சாதிப்படை மருந்து. மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன். அயலார் எதிர்ப்புக்கு அணையா விளக்கவன்" என்று கவிஞருலகம் பெரியாருக்கு வாழ்த்தெழுப்பிற்று.

தமிழர் உரிமை தமிழருக்காக வேண்டுமென்பதை அவர் கூறியபோது "ஆம்; பெறவழி என்ன?" என்று தமிழகம் கைகூப்பிக் கேட்டது.

தமிழர் இழிவு தகர்க்கப்பட வேண்டும் என்று அவர் முழக்கியபோது "உடனே செய்வோம்" என்று தமிழ் மக்கள் சேர்ந்து முழக்கினர்.

"கடவுள், மதம், சாதி, சமயம், புராணம், இதிகாசம் இவை கற்பனை—மக்களைப் பேதப்படுத்த எழுந்தவை" என்று அவர் விளக்கம் தந்தபோது "அறிந்தோம் உண்மையை" என்று ஆயிரமாயிரம் இளைஞர்கள் அவர் தலைமையின்கீழ் நின்றனர்.

"சமூகச் சட்ட திட்டங்கள், பழக்க வழக்கங்கள், இளமை மணம், பொருந்தா மணம் இன்னபிற மாற்றியமைக்கப்பட வேண்டும், பகுத்தறிவிற்கேற்ப" என்று அவர் எடுத்துக்காட்டியபோது "திருந்தாத சமுதாயமும் திருந்தும்" என்று சீர்திருத்த ஆவேசம் கொண்டனர் தொண்டர்கள்.

"திராவிடநாடு தனிநாடு; வடநாட்டுக்கும் நமக்கும்தொடர்பு வேண்டியதில்லை" என்று நாட்டுப் பிரிவினைக்கான காரணங்களை அவர் தெளிவுபடுத்தியபோது, "திராவிடநாடு திராவிடருக்கே" என்ற முழக்கம் வானைப் பிளந்தது.

"இந்தியைக் கட்டாயப்படுத்துவது தீது பயப்பதாகும்; தமிழர் தங்கள் உயிரைக் கொடுத்தேனும் இதனை எதிர்த்தே தீருவர்" என்று அவர் அறிக்கை தந்தபோது ஆயிரக் கணக்கில் ஆடவர், பெண்டிர் குழந்தைகளுடன் சிறை புகுந்தும், தடியடிபட்டும், ஆட்சிக்கு நல்லறிவூட்டினர்.

இவ்வாறு பெரியாரின் பெருந்தொண்டு தமிழர்களைத் தட்டி எழுப்பியிராவிட்டால், தமிழகத்தில் ஆரிய அச்சு இவ்வளவு விரைவில் முறிந்திராது என்பதை நாட்டு மக்களிற் பெரும்பாலோர் உணர்ந்திருப்பதால் பெரியார் இராமசாமி தமிழரின் ஒப்பற்ற தலைவராக விளங்கி வருகிறார்.

திராவிடக் கழகம் பெரியார் இராமசாமி தலைமையில் நாட்டுக்கு ஈடு இணையற்ற முறையில் பணியாற்றி வருகிறது. ஏறக்குறைய இலட்சத்திற்கு மேற்பட்ட முதியோர், இளைஞர், பெண்டிர் ஆகியோரைத் தன்பால் ஈர்த்திருக்கிறது. "கழகக் கூட்டமென்றால்தான் மக்கள் கூடுகிறார்கள்" என்ற நிலை சென்னையில்மட்டுமின்றி, ஒவ்வொரு ஊரிலும் ஏற்பட்டிருக்கிறது. கழகத்தின்மீது ஆட்சியினர் அவிழ்த்துவிட்டிருக்கும் அடக்குமுறையே, கழகத்திற்குள்ள செல்வாக்கு இன்னதென்று புலப்படுத்திவிடும். கழக ஏற்பாடுகளைத் தேடித் துருவி "ஜாமீன் கொடு" என்று கேட்டுவரும் சென்னை அரசினர் கழகத்திற்குள்ள வலுவை, நாட்டு மக்களிடம் திராவிடக் கழகம் பெற்றுள்ள ஆதரவை நன்கு உணர்ந்துதான் இருக்கிறார்கள். சிறந்த பேச்சாளர்கள் நம்மிடம்; திறம்பட எழுதுவோரும் நம்மிடமே உண்டு. நாடகம், சினிமாத் துறைகளிலும் நம இயகக வாடை வீசத் தொடங்கியிருக்கிறது, இவ்வாறு கழகம் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் நிலையை, மாற்றுக் கட்சியினரும் ஆட்சியிலுள்ள காங்கிரஸாரும், 'நாம் தேர்தலில் கலக்கமாட்டோம்' என்று பன்முறை அறிவித்தும் நம்ப மறுத்தவர்களாய், 'ஏது திராவிடக் கழகத்தான் மந்திரியாய் விடுவானோ?' என்று பயப்படும் அளவுக்கு வளர்ந்துள்ள நிலையை நாம் விளக்கிக்கொண்டிருக்க வேண்டியதில்லை.

இப்போதுதான் நமக்கு அந்தச் "செய்தி" வருகிறது. "ஏன் வளர்ந்தாய்? முளையிலேயே கிள்ளப்பட்டிருக்கக்கூடாதா?" என்று துக்கப்படும் அளவுக்கு, நமக்கு வேதனைதரும் திருமணச் செய்திதான் அது. ஆம், பெரியார் இராமசாமி தம் 72-வது வயதில் 30 வயது நிறைந்த மணியம்மையை மணக்கப் போகிறாராம். சென்னை மணப்பதிவாளரிடம் மணமகள்

முன்னறிவிப்புக் கொடுத்து நாட்கள் பதினைந்தும் தீர்ந்தன; இனி எந்த நிமிஷத்திலும இத் திருமணம் நடக்கலாமாம்.

திருமணச் செய்திகள் பெரும்பாலும் நமக்கு இன்பத்தை விளைவிப்பனவாகவே அமையும்; இன்பம் விளைக்காவிட்டாலும நாம் துக்கபபடும் அளவுக்கு, கண்ணீரைப் பெருக்கும் அளவுக்கு, துயர நிகழ்ச்சியாக எத் திருமணமும் அமையும என்று நாம் எதிர்பார்த்ததில்லை. ஆனால் நம இணையற்ற தலைவர் பெரியார் தாம் மணப்பதன்மூலம் நம்மையெல்லாம் அழச் செய்கிறார்; துயரத்தில் நம்மை ஆழ்த்தியேனும் மணியம்மையைப பதிவு மணம் செய்வது என்று அவர் திட்டமான முடிவுக்கு வந்துவிட்டார்.

இச் செய்தி முதலில் நமக்கு வந்தபோது, "ஐயாவுக்குத் திருமணமாமே! தெரியுமா, உங்கட்கு! சென்னையில் எங்கு பார்த்தாலும் இதுதான் பேச்சு" என்று நண்பரின் கடிதம நமக்குக கிடைத்தபோது, உண்மையில் நாம் நம்பவில்லை; யாரோ பெரியாருக்கு விரோதி கட்டிவிட்ட புரளி, கட்டுக்கதையாயிருக்குமென்றுதான் எண்ணினோம். ஆனால்சென்னைமாவட்டக் கழக நிர்வாகக் கமிட்டியின் அறிக்கை நமக்குக் கிடைத்தபோதுதான் செய்தி உறுதியாயிற்று. நாம் திகைத்தோம் திண்டாடினோம்; கண்ணீர் உகுத்தோம்; கலங்கினோம்; யாது செய்வது என்று புரியாமல் தவித்தோம.

இத்துயர ஓலை நமக்கு மட்டுமின்றி, நாட்டிலுள்ள அனைவருக்கும் கிட்டிற்று; ஆங்காங்கு கழகத்தை நடத்துவோர், பிரமுகர்கள் தலைவர் பெரியாருக்கு இத் திருமணம 'தகாது' என்று கடிதங்கள் அனுப்பினர்; சென்னையினின்றும் தூது சென்று திருப்தியான விளக்கம் பெறாது திரும்பினர்; கழகநிர்வாகக் கமிட்டிகள் அவசர அவசரமாகக் கூடி வருத்தம் தெரிவித்துப் 'பெரியார்' தம் ஏற்பாட்டை மாற்றிக் கொள்ளவேண்டும என்று வேண்டுகோள்கள் விடுத்தன.

தலைவர் பெரியார், தம் இயற்கைப் பண்புக்கேற்ப அசைந்தாரில்லை. "திருமணம் நடப்பது உறுதிதான்; தேதி நிச்சயிக்கப்படவில்லை" என்று பத்திரிகைகட்கு அறிக்கை தந்தார்.

"நாம் இதுவரை பேசி வந்த கொள்கைக்கு மாறுபாடாகவன்றோ பெரியார் மணம் செய்துகொள்ளவிருக்கின்றார். தள்ளாத வயதில் ஆடவர்கள் இளம் பெண்களை மணப்பது 'தவறு' என்று நாமும் அவரும் எத்தனை மேடையில் பேசி வந்திருக்கிறோம. நாம் போதித்தபடி நம் தலைவரே நடக்கத் தவறலாமா?" என்று வேதனைபபட்டு, வெட்கப்பட்டு, பெரியாரின் ஊழியர்கள், பெரியாரின் வாழ்வு தங்கள் வாழ்வெனக் கருதியுள்ள எண்ணற்ற மெய்த்தொண்டர்கள் அவருக்கு விண்ணபப்டம் விடுத்தனர். இவ் விண்ணப்பங்களும் விழலுக்கிறைத்த நீராயின. "திருமணம் என் சொந்த விஷயம.

மனைவியாக அல்ல நான் மணி அம்மையை மணப்பது. வாரிசாக, என் சொத்துக்களுக்குச் சட்டப்படிக்கான வாரிசு வேண்டியே அவரைத் திருமணம் செய்துகொள்கிறேன்'' என்று விளக்கம் தந்தாரே ஒழியத் "திருமணம் நடைபெறாது" என்று நாம் மகிழும்படியாக ஒரு வார்த்தை மறந்தும சொன்னாரில்லை. இம் மாறா நிலைகண்டு கட்சிப் பிரமுகர்களிடையே 'கலகலப்பும்' ஆத்திரமும கொதிப்பும் ஏற்பட்டது; அதன் விளைவாக நாளிது 10-ம் நாள் திருச்சியில் மாகாண திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தைத் தோழர் வேதாசலம் அவர்கள் கூட்டியிருக்கிறார். அங்கே இச் சிக்கலான பிரச்னை தீர்க்கப்பட்டாக வேண்டும்.

இன்று கடைசியாகப் பெரியார் விடுத்திருக்கும் அறிக்கையில் காண்கிறபடி ''பெரியாரின் பொருளும், அவரை நம்பிப் பிறர் அவரிடம் கொடுத்த பொருளும்'' கூட இயக்கத்திற்குச் சேரவேண்டுமென்றே பெரியார் எண்ணுவதாகத் தெரிகிறது. அதாவது அவருடைய தனிப்பட்ட சொத்தும திராவிடர் கழகத்திற்குப் பயன்பட வேண்டுமென்பதுதான் அவர் கருத்தென விளங்குகிறது. அவர் எழுத்துப்படி பார்த்தால் அவருக்கு வாரிசு வேண்டிய அவசியமே இல்லையென்பது புலனாகும். மேலும் மணியம்மை இயக்கத் தலைவியல்லவென்றும், டிரஸ்டிகளில் ஒருவரே யென்றும் அவர் விளக்கம் தந்திருப்பதும், காரியத்தை இன்னும் சுலபமாக்குகிறது. மணியம்மை சுதந்திரபாத்தியமோ, பரம்பரைபாத்தியமோ கொண்டாட முடியாத முறையில் அவர் ஏன் வாரிசாக வேண்டும்?'டிரஸ்டிகளில் மணியம்மை ஒருவர்' என்ற நிலைதான் பெரியார் எதிர்பார்க்கும் நிலையானால், அதனை எளிதாக, இத்தனை கெட்டபெயருக்கு இடமின்றிச் செய்துவிடலாமே! கழக நிர்வாகக் கமிட்டியின் ஆலோசனையின் பேரில் ஒரு 'டிரஸ்ட்' ஏற்படுத்தி, அந்த டிரஸ்டில் மணியம்மையும் ஒருவரென்று அமைத்து விடுவது இந் நெருக்கடியை எளிதில் தீர்க்குமென்பதே நம் கருத்தாகும்.

''மணியம்மைக்கு இயக்கத்துக்குத் தலைமை தாங்கும் பொறுப்பு அளிக்கப்படவில்லை'' என்றுகூறிவிட்டதோடு, ''மணியம்மை என் சொந்தச் சொத்துக்கு வாரிசுதான் என்றாலும் அவ்வாரிசுரிமையும் சுதந்திர உரிமையோ, பரம்பரைப் பாத்தியதை உரிமையோ அல்ல'' என்று விளக்கந் தந்த பிறகு, ''என் பொருளும் கழகத்திற்குச் சம்பந்தப்படுத்தத்தான் இந்த ஏற்பாடு செய்கிறேன'' என்று திருத்தம் கூறிய பிறகும், மணியம்மையை மணப்பது அவசியமா என்று பெரியார் சிந்திக்க வேண்டும்.

நாட்டிலே பெரியாருக்குள்ள புகழ்நிலை என்ன? இன்று அவர் காரணம் சிறிதுமின்றி மேற்கொள்ள விருக்கும் ''ஏற்பாட்டின்'' பயனாய் அவர் புகழ் கெடுவதா? அவர் கட்டிக் காத்துவளர்த்த திராவிடர் கழகம் அழியாப் பழியைப் பெறுவதா? இதனை ஒவ்வொரு கழகத் தொண்டரும் உணர்ந்

தால் 'திருமணம்' நடைபெறுவது எவ்வளவு ஆபத்து என்பதை நன்கு புரிந்துகொள்ளமுடியும். இந்நிலையிலே கூடியுள்ள மத்திய நிர்வாகக் கமிட்டியின கடமை பெரிது; சிக்கலை நன்கு புரிந்து கொண்டு அதனைத் தீர்ப்பதிலே அவர்கள் முனையவேண்டும். பெரியார் திருமணம் 'அவர் நினைக்கிறபடி சொந்த விஷயமல்ல' நம் அனைவரையும் பாதிக்கும் விஷயம் அது. நாட்டிலே எழுந்துள்ள கேலிப் பேச்சும, கண்டனமும். நாம் இதுவரை ஊருக்குரைத்துவந்த கொள்கைகளின் மதிப்பை ஒரு நொடியிலே குலைத்துவிடப் போதுமானவை 'திருமணம் நடக்கவிருக்கிறது' என்னும்போதே இந்நிலை என்றால், 'நடந்துவிட்டது' என்றால் 'முக்காடு' போட்டுக்கொள்வதைத் தவிர வேறுவழியில்லை; நாட்டிலே நாம் நடமாட வழியில்லை. இதனை நன்கு மனத்தில் பதித்துக்கொள்ளவேண்டும்.

பெரியார் "இது திருமணமல்ல" என்று எத்தனை காரணம் காட்டினாலும் நாடு ஏற்காது; அதனால் வரும் பழியும் இழிசொல்லும் தேங்கி விடாது. எனவே பெரியார் ஒன்று இத் திருமணத்தைக் கைவிட வேண்டும் அல்லது கட்சியைக் கைவிட வேண்டும். கழகத் தோழர்கட்கு, பெரியவர்கட்கு உண்மையிலேயே "கொள்கை பெரிது" என்ற எண்ணம் இருக்குமானால், திராவிடர் கழகம் தொடர்ந்து தன் பணியை நாட்டிற்குச் செய்யவேண்டுமென்ற கருத்திருக்குமானால், பெரியார் திருமண ஏற்பாட்டை அவர்கள் ஒருமுகமாகக் கண்டித்தாகவேண்டும். "நிறுத்துங்கள் திருமணத்தை" என்று அவருக்கு அறிவித்தாக வேண்டும். "நிறுத்தாவிட்டால் எங்கள் ஒத்துழைப்பு உங்கட்குக் கிடைக்காது; உங்களை விட்டு நாங்கள் விலகுகிறோம். எங்கள் நம்பிக்கையை நீங்கள் இழந்துவிட்டீர்கள்" என்று தெரிவித்தாகவேண்டும். இதில் ஒளிவு மறைவு வேண்டியதில்லை; உறுதியாய்நின்றால்தான் கொள்கை நிலைக்கும்! நம் மானம் பிழைக்கும்!

நம்மைப் பொறுத்த வரையில் நாம் பெரியாருக்கு விடுக்கும் வேண்டுகோள் இதுதான்: செயற்கரிய செய்த நீங்கள் பொருந்தாத் திருமணத்தை மேற்கொள்ளவிரும்புவது 'தகாது' தாங்கள் எடுத்தியம்பி வந்த கொள்கைப்படியே அது 'தவறு'; எனவே 'வேண்டாம' இந்த ஏற்பாடு. நம் வேண்டுகோள் பெரியாரிடம் சம்மதம் பெற்று வருமானால் நாம் மகிழ்வோம், ஆனால் அச் சம்மதம் கிடைக்கும் வரை, அவருடைய திருமணம் நடைபெறாது என்ற உறுதிமொழியை நாம் பெறும் வரை, எண்ணற்ற கழக ஊழியர்கள் செய்துள்ள முடிவுக்கேற்ப நாமும் அவரைவிட்டு விலகிநிற்போம். என்று அவர் 'திட்டத்தை மாற்றினேன்' என்று அறிவிக்கிறாரோ, அன்றே ஓடோடிச் சென்று அவரடிக் கீழ் நின்று பணியாற்ற நாம் தயங்கோம் என்பதையும் பொதுமக்களுக்கும் கழகத் தோழர்களுக்கும் அறிவித்துக் கொள்ள விரும்புகிறோம.

திருமணப் புதுமை!

14—5—49

பெரியார் — ஆச்சாரியார் சந்திப்பு. சொந்த விஷயம் பற்றிப்பேசியதாக இருவருமே கூறிவிட்டனர்.

25—5—49

கோவை மாநாட்டில் "எனக்கு வாரிசு ஏற்படுத்துவது பற்றித்தான் கவர்னர் ஜெனரலுடன் கலந்தாலோசித்தேன்" என்று பெரியார் குறிப்பிட்டார்.

19—6—49

"இயக்க விஷயத்தில் எனக்கு இதுவரை அலைந்தது போல் அலைய உடல் நலம் இடம் கொடுக்கவில்லையென்றும், என்னைப்போல் பொறுப்பு எடுத்துக்கொள்ளத்தக்க ஆள் யார் இருக்கிறார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை உள்ளவர்கள் கிடைக்கவில்லையென்றும், ஆதலால் எனக்கு வாரிசாக ஒருவரை ஏற்படுத்தி அவர் மூலம் ஏற்பாடு செய்து விட்டுப்போக வேண்டும் என்று அதிக கவலை கொண்டிருக்கிறேன் என்றும் இதுபற்றி சி. ஆர். அவர்களிடமும் பேசினேன் என்பதாகவும் சொல்லி இருக்கிறேன்......"

— **பெரியார் அறிக்கை (விடுதலையில்)**

27—6—49

சென்னை மாவட்ட தி. விடர்கழக நிர்வாகக் கமிட்டி சென்னையில் பெரியார் இல்லத்தில் தோழர் சி. தங்கராஜ் தலைமையில் கூடித் தலைவர் பெரியார் தமது 72 வது வயதில் 26 வயதான தோழியர் கே. ஏ. மணி அவர்களைப் பதிவு மணம் செய்து கொள்ளப்போவதாக ரிஜிஸ்ட்ரார் ஆபீஸில் அறிவிப்புத் தொங்கவிட்டிருப்பதைக் கண்டு வருந்துவதுடன், இந்த ஏற்பாட்டினால் இயக்கத்திற்கு இழுக்கு நேரிடுமாதலால் இதை உடனே ரத்துச் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்வதாக ஒருமனதாகத் தீர்மானித்தது.

28—6—49

"......... இந்த நிலையில் என்னைப்பற்றியும், இயக்கத்தைப் பற்றியும் இயக்க நடப்பைப் பற்றியும், எனக்குப் பின்னும் ஒரு அளவுக்காவது இயக்கம் நடைபெற வேண்டும் என்பது பற்றியும், ஏதாவது ஒரு வழி செய்ய வேண்டியதைப் பற்றியும், மிகக்கவலையுடனும், பற்றுடனும், சிந்தித்துநடக்க வேண்டியவனாக இருக்கிறேன்...... இதற்காக என் அனுபவத்தைக் கொண்டு எனக்குத் தோன்றியதை நான் செய்து முடிக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறேன். அக்காரியங்கள் எனது தோழர்களுக்கும், என்னிடம் அன்பும் எனது நலத்தில் கவலையும் உள்ளவர்களுக்கும் சற்று புரட்சியாகவும் திடுக்கிடக்கூடியதாகவும், இயக்கமே அழிந்துவிடுமோ என்று பயப்படக்கூடியதாகவும், எனக்கும் ஒரு கெட்ட பேரும், இழிவும் ஏற்படக்கூடிய பெரிய தவறாகவும்கூடக் காணப்படுவதாகத் தெரிகிறது. பொதுமக்களுக்கும் அப்படியே காணப்படலாம்........எனது லட்சியத்தின் நன்மை, இயக்கத்தின் நன்மை, என்பதைக் கருதி மேல் காட்டிய அவசரநிலையில் இயக்கத்துக்கு ஆகச் சில ஏற்பாடுகள் செய்ய

முன்வந்துவிட்டேன்...முதலில் எனக்கும் எனதுபொருளுக்கும்சட்டப்படிக் கான வார்சாக ஒருவரை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமும் அவசரமும் ஆகையால்நான் 5, 6 வருஷ காலமாகப்பழகி நம்பிக்கைகொண் டதும் என் நலத்திலும் இயக்க நலத்திலும் உண்மையான பற்றும் கவலை யும் கொண்டு நடந்து வந்திருக்கிறதும்மான மணியம்மையை எப்படியாவது வார்சுரிமையாக ஆக்கிக்கொண்டு, அந்த உரிமையையும் தனிப்பட்ட தன் மையையும் சேர்த்து, மற்றும் சுமார் 4, 5 பேர்களையும் சேர்த்து இயக்க நடப்புக்கும் பொருள் பாதுகாப்புக்குமாக ஒரு டிரஸ்டுப் பத்திரம் எழுத ஏற்பாடு செய்திருக்கிறேன். அப்பத்திரமும் எழுதப்பட்டுவருகிறது. இதில் சட்டப்படி செல்லுபடி ஆவதற்காக என்று நமது இஷ்டத்துக்கு விரோத மாகச் சில சொற்கள் பயன்படுத்த நேரிட்டால்., அதனால் கொள்கையே போய்விட்டதென்றோ, போய்விடுமோ என்றோ பயப்படுவது உறுதியற்ற தன்மையாகும்......

— பெரியார் அறிக்கை (விடுதலையில்)

கடிதங்களுக்குப் பதில்

"தற்சமயம் நான் எடுத்துக்கொள்ளப்போகும் நடவடிக்கைகள் குறித் துத் தங்களுக்குத் தோன்றியபடி எல்லாமும், மற்றும் பிரமாதமா ஏதோ முழுகிப்போனதுபோலவும், வெகு பரபரப்பான கடிதங்களைச் சில நண்பர்கள் எனக்கு எழுதி வருகிறார்கள்......"

— ஈ. வே ரா. (விடுதலை)

விளக்கம் திருப்தியளிக்கவில்லை

இன்று இரவு 8-30 மணிக்குச் சென்னை மாவட்ட திராவிடக் கழக நிர் வாக உறுப்பினரில் பலரும், இயக்க முக்கியஸ்தர்களும் கூடிப் பெரியார் தமது திருமண சம்பந்தமாய் "விடுதலை"யில் வெளியிட்டுள்ள அறிக்கை எவ்வகையிலும் திருப்தியளிக்கவில்லை யென்பதைத்தெரிவித்ததுடன், இத் திருமண விஷயமாயும் இயக்க விஷயமாயும் பெரியார் கொண்டுள்ள ஏற்பாட்டை ரத்துச் செய்யாதவரை அவருடன் ஒத்துழைக்க முடியாதென் பதையும் தெரிவித்துவிடவேண்டுமெனவும் தீர்மானித்தனர்.

1—7—49

"......பெரியார் இராமசாமிக்கு இப்பொழுது வயது 72. கிழவர். வாழ்க்கையைப் பூரணமாக அனுபவித்தவர். இத்தகைய ஒருவர், தம் 72-ம்வயதில் ஒருகுமரிப்பெண்ணை, 25-வயதுமதிக்கத்தகுந்த ஒருபெண்ணை மணந்துகொள்ளவிருக்கிறார் என்று நாம் அறிகிறோம். இது உண்மையா னால் பெரியார் அவருக்குள்ள சிறப்பையும் பெருமையையும் இழந்துவிட் டார் என்றுதான் நாம் வருத்தத்தோடு குறிப்பிடவேண்டியதாக இருக்கி றது. பெரியார் இரண்டாவது முறையாக மணமகனாகிறார் என்ற செய்தி நமக்குத்திகைப்பையும் வியப்பையும் கொடுத்தது. கூடாமணத்தால்வரும் கேடுகளையும், கிழவர்கள் குமரிப் பெண்களைக் கட்டுவதன் வாயிலாக ஏற் படும் தீங்குகளையும் விளக்கமாகவும் தெளிவாகவும் சொல்லிவந்த ஒருவர், அக்கொள்கையைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு, அவரே அத் தீமைக்குப் பலியாகிறார் என்றால் இதை என்னென்பது?......"

— பிரசண்ட விகடன்

தூத்துக்குடி எதிர்க்கிறது

தூத்துக்குடி திராவிடர் வாலிபர் கழகக் கமிட்டிக் கூட்டம் இன்று தோழர் S. O. வெற்றிவேல் தலைமையில் கூடித் தலைவர் பெரியார் தமது போக்கை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று தீர்மானங்கள் நிறைவேற்றி யது.

சென்னையில் கிளர்ச்சி

"......சுமார் 10 நாள் நான் சென்னையில் இல்லாதிருந்த காரணத் தால் நான் எனக்கு ஒரு வாரிசு ஏற்படுத்திக்கொள்வது என்ற ஒரு முயற்

சியைச் சாக்காகக் கொண்டு இச் சென்னையில் இயக்கத் தோழர்கள் பெருத்த கிளர்ச்சி செய்திருப்பதாக அறிந்தேன்......"

ஈ. வே. ரா. குறிப்பு (விடுதலை)

2—7—49 எங்கள் எண்ணம்

"......கட்சிப் பணத்தைக் கட்சியிலுள்ள யாரையும் கலந்து அவர்கள் எண்ணத்தை அறியாமல், கட்சி நிர்வாகக்கமிட்டியைக் கூட்டிக்கேளாமல் தானாகத் தன் மனம் போன போக்கில் யாரோ ஒருவருக்குப் பெரியார் எழுதிவைக்க முன் வந்திருப்பது முதல் தவறு. கட்சிப் பணத்தை மட்டு மல்லாமல், கட்சி நிர்வாகத்தையே, தன் கட்சியை நடத்திச் செல்லும் உரிமையையே தன் விருப்பப்படி யாரோ ஒருவருக்குத் 'தானம்' செய்ய முடியும் என்று பெரியார் எண்ணி அந்தப்படி நடக்க முன்வந்திருப்பது இரண்டாவது தவறு. கட்சியை நடத்துவதற்கு மணியம்மையார் ஒருவரைத் தவிர வேறு யாருக்கும் தகுதியில்லை என்று அவர் கூறுவது மூன்றாவதுதவறு. மணியம்மையாரிடம் கட்சியையும் கட்சிப்பணத்தையும், கட்சி நிர்வாகத்தையும் ஒப்படைக்க வேண்டுமானால், அதற்குச் சரியான வழி அந்த அம்மையாரை மணம்செய்து கொள்வது தான் என்று அவர் முடிவு செய்திருப்பது நான்காவது தவறு. இவை நான்கும் மன்னிக்க முடியாத தவறுகள் என்பதை யாருமே மறுக்க முடியாது......"

— போர்வாள் (தலையங்கம்)

3—7—49 வெட்கப்படுகிறோம்

"......பொருந்தாத் திருமணம்! புனிதத் தலைவரின் பொருந்தாத் திருமணம்! எந்தக் காலத்திலும், எதிரியின் எந்த வீச்சும், சர்க்காரின் எந்த நடவடிக்கையும், இன்று நமது இயக்கத் தோழர்களைத் திகைக்கச் செய்திருப்பது போலச் செய்ததில்லை...... நடைபெறப்போவது பொருந்தாத் திருமணம் மட்டுமல்ல, புதிய மகுடாபிஷேகமும்...... பொருந்தாத்திருமணம் என்று கேள்வியுற்றதும் வெட்கப்பட்டோர்—அதற்குப் பெரியார் தந்த அறிக்கை நமக்கு வேதனையை ஊட்டியது. இதோ விரட்டப் படுகிறோம், நாம் கட்டிய கோட்டையிலிருந்து, நாம் பாடுபட்ட களத்திலிருந்து தந்தை மக்களை விரட்டியடிக்கிறார், புதிய வாரிசு தேடிக்கொண்டு........ திராவிடத் தோழர்களே தடுமாற்றத்திற்கு இடமளிக்காதீர்கள்! தலைவருக்குத் தெரிவியுங்கள். உங்கள் ஏற்பாட்டை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம், கண்டிக்கிறோம். கண்டன அறிகுறியாக, இதோ உம்முடன் சேர்ந்து பணியாற்றுவதை நிறுத்திவைக்கிறோம். விலகி நிற்கிறோம் என்று தெரிவித்துவிடுங்கள். நமது கண்ணீரும் கண்டனமும், விலகி நிற்கிறோம் என்ற உறுதியும், அவருடைய உள்ளத்தை மாற்றினால், இந்த அநீதியான ஏற்பாட்டை அவர் கைவிட்டால், நாம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, அவருடைய மலரடிக் கீழ்நின்று மீண்டும் பணிபுரிவோம்......"

— சி. என் அண்ணாதுரை முதலியோர் (திராவிடநாடு இதழில்)

கேவலமானதாகும்

"......பெரியார் தமது ஏற்பாடுகளை வாபஸ் பெற்றாலன்றி நான் இயக்கத்தில் கலந்து பணியாற்றுவதென்பது சூத்திரப் பட்டத்தைவிடக் கேவலமானதாகுமென்று எண்ணுகிறேன்......"

— எஸ். வி. நடராசன்

இறப்பைப்பற்றிக் கவலையேன்?

"...... ஒரு இலட்சியவாதி தன் இறப்பைப்பற்றிக் கவலைப்படாமல் இருக்கின்ற நிலையைத்தான் இது வரையிலும் நாம் படித்துப் பார்த்துமிருக்கிறோம் இறப்புக்குப் பின் கவலைப்படுபவர்கள் மோட்ச நரக நம்பிக்கையுடையவர்கள். பெண்டு பிள்ளைகள் சுற்றம் நட்பு ஆகியவற்

தின் மீது பற்றுக்கொண்டவர்கள் செய்கின்ற சாதாரண காரியந்தான் அது. பிரான்சு நாட்டு மாபெரும் வீரன் நெப்போலியன் இறந்த பிறகு கூடப் பட்டாளம் கலைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. தத்துவத்தை அளித்த சாக்ரடீஸுக்குப் பின் தத்துவம் அழிந்துவிடவில்லை. மறைந்த நாட்டுத்தலைவர்கள். ஜின்னா, காந்தியார், மார்ட்டின் லூதர், இயேசு, நபிநாயகம் ஆகியவர்களுக்குப் பிறகு நேரிடையான வாரிசுதார் யாருமிருந்தா அவர்கள் கொள்கைகளைக் காப்பாற்றினார்கள்? பொதுமக்க ளல்லவா! அதைப் போலவே பெரியாருக்குப் பிறகு அவர் வாரிசு தேட வேண்டிய அவசியமில்லை. அவைகள் நேர்மையானவைகளாயிருந்தால், தேவையானவைகளாக இருந்தால், தாமாகவே நிலைத்து நிற்கும்''

சி. பி. சிற்றரசு
டி. கே. சீனிவாசன்

திருச்சித் திராவிடக்கழக ஊழியர்கள் கூட்டம் தென்னூர் திரு டி. பி. வேதாசலம் அவர்கள் தலைமையில் கூடிப் பெரியார் தம் உத்தேசத்தைக் கைவிட வேண்டுமென்று கோரித் தீர்மானமொன்று ஏகமனதாக நிறைவேற்றியது.

4—7—49

புதுக்கோட்டைத் திராவிடர்கழகம் தோழர் அரு. பெரியண்ணன் அவர்கள் தலைமையில் கூடித் தலைவர் தம் திருமண, வாரிசு ஏற்பாடுகளை உடனடியாக ரத்துச் செய்ய வேண்டுமாய்த் தீர்மானம் நிறைவேற்றியது.

புரசை முன்னேற்றக் கழக அவசர நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் தோழர் D S. வேலன் தலைமையில் கூடிப் பெரியாரின் ஏற்பாடுகளை கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றியது.

ஸ்ரீ அண்ணாத்துரை அறிக்கைபற்றி அவரது (பெரியாரது) அபிப்பிராயத்தைச் சொல்லும்படி வற்புறுத்தியபோது ''இந்தச் சமயத்தில் இவ் விஷயமாகச் சர்ச்சை நடத்துவதெல்லாம் வீணே'' என்றார்.

— தினமணி (செய்தி)

5—7—49

''......ஈ. வே. ரா. எங்கும் திராவிடக் கழகத்துக்கு வாரிசு நியமிப்பதாகக் குறிப்பிடவே இல்லை......சித்தார்த்தி வருஷம் மாசி மாதம் 27-ம் தேதி புதன்கிழமை (ஆங்கில ஆண்டு 1919-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 10-ம் தேதியாகலாம்) என்றும் தெளிவாய்ச் சொன்னதைக் கேட்டுக் கொண்டு போனவர் ''பாரததேவி'' ''கடற்காற்றில்'' ''25 வயதுப் பெண்'' என்று பிரசுரித்து இருக்கிறது ...மணியம்மை வயது 20 க்கும் கீழ் என்று சில கழகங்களே நமக்கு எழுதி இருக்கின்றன, இதில் குறிப்பிடக்கூடிய கழகம் விருதுநகர்க் கழகமாகும். மணியம்மை விதவை என்று பிரசாரம் செய்யப் பட்டிருக்கிறது...''

— விடுதலை (தலையங்கம்)

''விவாகம் செய்துகொள்ளப் போகிறேன் என்று அவரிடம் (ராஜாஜியிடம்) நான் சொன்னேன். அதற்கு அவர் என்னைவிட நீங்கள் அனுபோகஸ்தர், சரி என்று தோன்றுகிறபடி செய்யுங்கள் என்று கூறினார்'' என்று ஸ்ரீ நாயக்கர் கூறினார்......''விவாக விஷயமாக எழுந்துள்ள தகராறு காரணமாகத் தங்கள் தலைமைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருமெனக் கூறப்படுகிறதே, அதுபற்றி நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள?'' என்று கேட்டதற்கு ''அம்மாதிரித் தீர்மானம் வரப்போவதாக எனக்குத் தெரியாது'' என்றார்......

— தினசரி (செய்தி)

கோவை கண்டிக்கிறது

கோவை நகரத் திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டியின் கூட்டமொன்று தோழர் பிள்ளாரி தலைமையில் கூடிப் பெரியாரின் திருமண

ஏற்பாடுகளையும் பிற முடிவுகளையும் கடுமையாகக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியது. — தினத்தூது

தஞ்சை வருந்துகிறது

தஞ்சை வ. உ. சிதம்பரம் வாசக மன்றத்தின் அவசரக் கூட்டத்தில் பெரியாரின் திருமண ஏற்பாடு குறித்து வருத்தம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. — தினத்தூது

கறுப்புக் கொடி காட்ட முடிவு

சென்னை பெரியமெட்டுத் திராவிடர் கழகத்தினர் பெரியார் — மணியம்மை திருமண வைபவத்தின் போது கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்வதென முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது. — தினத்தூது

மாணவர் கழகத் தலைவர் விலகுகிறார்

சென்னை மாகாண திராவிட மாணவர் கழகத் தலைவர் கே. ஏ. மதியழகன் தலைவரின் ஏற்பாடுகள் குறித்து மாறுபட்டுக் கழகத்திலிருந்து விலகுவதாக அறிக்கை விடுத்திருக்கிறார். — தினத்தூது

திருமண நோக்கம்

"திருமதி மணி அம்மையாரைத் திருமணம் செய்துகொள்ள யோசித்திருப்பதன் ஒரே நோக்கம், என்னுடைய சொந்தச் சொத்துகளுக்கு ஒரு சட்ட பூர்வமான வாரிசைத் தேடிக்கொள்வதேயாகும். எனவே, சிலர் நினைப்பதுபோல் இவ்வளவு காலத்திற்குப் பின் ஒரு மனைவியைத் தேடிக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் அல்ல" — இவ்வாறு பெரியார் ஈ. வே. ரா. மெயில் நிருபருக்களித்த பேட்டியின்போது கூறியுள்ளார். ... ...சில பத்திரிகைகள் திருமதி மணி அம்மையாருக்கு வயது 20க்கும் குறைவு என்று கூறுவதை மறுத்து அம்மையாருக்கு 31 வயதாகிறதென்றும் குறிப்பிட்டுள்ளார். "எங்கள் நாடு"

சாகும்வரை உண்ணாவிரதம்

பெரியார் தமது திருமணத்தை ரத்துச் செய்ய வேண்டுமென்று கோரி, அவர் இல்லத்தின் முன்பு சாகும்வரை உண்ணாவிரதமிருக்கப் போவதாகப் பல்லடம் தாலுகா திராவிடர் கழகச் செயலாளர் எம் பொன்னுச்சாமி அறிவிக்கிறார். —"எங்கள்நாடு"

6—7—49

"10—7—49 காலை 10-மணிக்கு திருச்சி டவுன் தென்னூர் தன் தோட்டத்தில் திராவிடக்கழக மத்திய நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்களைக் கட்சிநிலை குறித்து ஆலோசிக்கக்கூடிப் பேச அழைக்கிறேன். எல்லோரும் தவறாது வரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று திருச்சி திரு தி. பொ. வேதாசலம் அறிவிக்கிறார். —"விடுதலை"

திருக்குறள் கூறுகிறது:

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்த லிலர்

சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டுபவர்

குன்றினனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றியனைய செயின்

குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும்
நாணின்மை நின்றக்கடை

ஈன்றாள் பசிகாண் பானாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை



கண் திறக்கு

— நக்கீரன் —

நடந்த கதை

வாழ்க்கையில் பல சோதனைகளுக்கு ஆளான சந்திரமோகன், தன் கடைசி காலத்தில் தமிழ் நாட்டையும் தமிழ் மக்களையும் நோக்கி "கண் திறக்குமா?" என்ற கேள்வியுடன் தன் 'கதை'யைச் சொல்ல ஆரம்பிக்கிறான்

சட்டப் பரீட்சையில் தேறிய சந்திரமோகன் பாரிஸ்டர் பரந்தாமனிடம் தொழிற்பயிற்சி பெறுகிறான். இந்தச் சமயத்தில் ரௌலட் சட்டத்தை எதிர்த்துக் காந்தி மகாத்மா கைதியானார் என்பதற்காகத் தேசமெங்கும் அவருடைய விடுதலையைக் கோரிக் கிளர்ச்சி செய்யப்படுகிறது. பாரிஸ்டர் பரந்தாமன், காந்திஜி கைதியானதற்காகப் பரம சந்தோஷப்படுகிறார். சந்திரமோகனுக்கு இது பிடிக்கவில்லை. அவன் அந்தக்கிளர்ச்சியில்பங்கெடுத்துக்கொண்ட தன் பயனாகப் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுகிறான் அங்கே தன்னைப் போலவே சிகிச்சை பெறுவதற்காக வந்திருந்த பாஸ்கரன் என்னும் பள்ளித்தோழனை அவன் காண நேருகிறது

ஒருநாள் பாரிஸ்டர் பரந்தாமனின் ஏக புதல்வி சாந்தினி எதிர்பாராத விதமாகச் சந்திரமோகனை ஆஸ்பத்திரியில் சந்தித்து "என்னை மறவாதீர்" என்று கேட்டுக் கொள்ளுகிறாள்

இதற்கு மத்தியில் சந்திரமோகனைப் பிரிந்த தாயார் இயற்கை எய்துகிறாள். தன்னந்தனியளான அவன் தங்கை பரிமளாவுக்குச் சாந்தினி ஆறுதல் கூறுகிறாள். தஞ்சையிலிருந்து வந்திருந்த பரிமளாவின் மாமா அவளைத் தம்முடன் அழைத்துச் செல்கிறார். தன் அண்ணாவின் செய்கையில் வெறுப்புக் கொண்ட பரிமளா தாயார் இறந்ததைப் பற்றி மட்டுந்தான் அவனுக்குத் தெரிவித்தாளே தவிர தான் தஞ்சைக்குச் சென்றுவிட்டதைப் பற்றித் தெரிவிக்கவில்லை.

விஷயம் தெரியாத சந்திரமோகன் விடுதலையடைந்ததும், நேரே சென்னைக்கு வருகிறான். தன் வீட்டில் வேறு யாரோ குடியிருப்பதைக் கண்டதும் அன்றிரவைப் பாரிஸ்டர் பரந்தாமன் வீட்டில் கழிக்கலாம் என்ற உத்தேசத்துடன் செல்கிறான். அங்கே அவனுக்கென்று ஓர் அதிசயம் காத்திருக்கிறது. ஏகாதிபத்திய பக்தரான பாரிஸ்டர் அசல் காந்தி பக்தராகக் காட்சியளிக்கிறார்!

பரிமளா தன் மாமாவின் மகனான சிவகுமாரனால் விரசமாக நடத்தப் படுகிறாள் என்ற செய்தி, சாந்தினி வாயிலாகச்சந்திரமோகனின் காதில் விழுகிறது. உடனே அவன் தஞ்சைக்குச் செல்கிறான். வழியில் சிவகுமாரனால் வஞ்சிக்கப்பட்ட செங்கமலத்திற்கு அவன் ஒரு சிறு உதவி செய்ய நேருகிறது அப்பொழுதுதான் ஈன்றெடுத்த சின்னஞ்சிறு சிசுவுடன் செங்கமலம் காட்சியளிக்கிறாள், செங்கமலத்துக்காக இரங்கிய சந்திரமோகன், அவளையும் அவள் தாயாரையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு தன் மாமாவின் கிராமமான செய்யாமங்கலத்துக்குச் செல்கிறான். அங்கே பரிமளாவைக் காணவில்லை. அவன் நினைத்தபடி சிவகுமாரனிடம் செங்கமலத்தைச் சேர்க்கும் முயற்சியிலும் அவனுக்குத் தோல்வியே ஏற்படுகிறது. ஆகவே வேறு வழியின்றி அவன் அவர்களுடன் சென்னைக்குத் திரும்புகிறான்.

வழியில் செங்கமலத்தின் தாயார் ஊர் வாயை அடைப்பதற்காகத் தன் மகளுக்குத் தானே தாலியைக் கட்டி வைக்கிறாள். அதைக்கண்டு வியந்த சந்திரமோகனுக்கு அவள் தன் கதையைச் சொல்கிறாள், தான் ஏற்கெனவே கல்யாணம் செய்து கொண்டிருந்த ஒரு பிராமணரைக் காதலித்து மணந்ததாகவும் அவர் இறந்தபிறகு தான் 'சூத்திரச்சி' என்பதற்காக அவருடைய சொத்தில் தனக்கு ஒன்றும் பங்கு கிடைக்கவில்லை என்றும் அதன் பயனாகத் தானும்

தன் மகளும் நாதியற்று நிற்க நேர்ந்ததாகவும் அவள் கூறினாள்.

செங்கமலம், அவளுடைய தாயார், சந்திரமோகன் ஆகிய மூவரும் எழும்பூர் ஸ்டேஷனில் இறங்கும்போது, எதிர்பாராத விதமாக அங்கு வந்திருந்த பாஸ்கரன் செங்கமலத்தின் தாயாரைக் கண்டதும் 'சித்தி!' என்கிறான். இதிலிருந்து செங்கமலத்தின் தாயாரைக் காதலித்து மணந்த பிராமணரின் மகன் பாஸ்கரன் என்று தெரியவருகிறது.

சந்திரமோகன் வருவதற்கு முன்னால் பாரிஸ்டரின் உதவியால் அவனுடைய வீடு காலி செய்து வைக்கப்பட்டிருக்கிறது. பரிமளாவும் அதற்குள் அங்கு வந்து சேர்ந்திருக்கிறாள். அவள் அண்ணனைக் கண்டதும, 'இன்னொருமுறை தேசத்துக்காகச் சிறை செல்வதாக இருந்தால் எனக்கு ஒருதுளி நல்லவிஷமாகப் பார்த்து வாங்கிக்கொண்டுவந்து கொடுத்துவிடு!'' என்று அழாக்குறையாகக் கேட்டுக்கொள்கிறாள்

ஒத்துழையாமை இயக்கத்தின் காரணமாகச் சந்திரமோகன வக்கீல் தொழிலை மேற்கொள்ள விரும்பவில்லை. ஆகவே, அவன 'தினபந்து' என்னும் ஒரு பத்திரிகையை ஆரம்பிக்கத் திட்டம் போடுகிறான். அதற்காகத் தன் வீட்டை அடமானம் வைத்துப் பத்தாயிரம் ரூபாய் கடன் வாங்குகிறான்.

நாளடைவில் சந்திரமோகனுக்கும் சாந்தினிக்கும் இடையே உதித்த காதல் வளர்ந்துவருகிறது. ஒருநாள் சாந்தினி தன் 'ட்யரி' களை மறந்து வீட்டில் வைத்துவிடுகிறாள். அவற்றைப் பார்த்த பாரிஸ்டருக்கு எல்லா விஷயமும் தெரிந்து விடுகிறது. 'உங்களுடைய காதலுக்குக் குறுக்கே நிற்க நான் விரும்பவில்லை' என்று அவர் சந்திரமோகனிடம் சொல்லி விடுகிறார்.

வெளியே சென்றிருந்த சந்திரமோகன் ஒரு நாள் வீடு திரும்பும்போது, தன் வீட்டில் யாரோ முன்பின அறியாத ஒருவன வந்து பரிமளாவுடன பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்துத் திடுக்கிடுகிறான. கடைசியில், அவன தஞ்சையிலிருந்து தன்னந்தனியாக வந்த பரிமளாவுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தவன என்று தெரிகிறது அவனுக்கே பரிமளாவைக் கல்யாணம் செய்து வைத்துவிட்டால் என்ன என்று சந்திரமோகனுக்குத் தோன்றுகிறது.

இதற்கிடையில் சூத்திரச்சி என்பதற்காக நீதிமன்றம் வழங்காத நீதியைப் பாஸ்கரன் செங்கமலத்திற்கும் அவன் தாயாருக்கும் வழங்குகிறான். தன்னுடைய சொத்தில் பாதியைப் பகிர்ந்து அவர்களுக்குக் கொடுப்பதோடு அவன் தான் அதுவரை அணிந்திருந்த பூணூலைக் கழற்றி எறிந்து ஆரிய வஞ்சக வாழ்விலிருந்து விடுதலை பெறுகிறான்.

இந்தச் சமயத்தில்தான் தான் கற்பழிக்க முயன்ற ஒருத்தியால் சிவகுமாரன் குத்திக் கொல்லப்பட்டான் என்ற செய்தி பத்திரிகையில் வெளியாகிறது. சந்திரமோகனும பரிமளாவும் அவனுக்கென்று ஒரு முழுக்குப் போட்டு வைக்கின்றனர்.

சிவகுமாரனுக்கு நேர்ந்தகதியைக் குறித்துச் செங்கமலம் கண்ணீர் வடிக்கிறாள். அத்துடன் நில்லாமல் அவனுக்காகத் தன் அன்னை கட்டிய தாலியையும் அறுத்தெறிகிறாள்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு பரிமளாவுக்கும் மணவாளனுக்கும் திருமணம் நடந்தேறுகிறது. சந்திரமோகன் பாஸ்கரன் மணவாளன் ஆகிய மூவரின் கூட்டுமுயற்சியால் ''தினபந்து'' உதயமாகி அஸ்தமித்தும் விடுகிறது. உப்புச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுச் சந்திரமோகன் மீண்டும் சிறைக்குச் செல்கிறான் அங்கே பாரிஸ்டர் பரந்தாமனைச் சந்திக்கிறான் ஆம் அவரும் வேதாரண்யத்தில் கைது செய்யப்பட்டு சிறைக்கு வந்திருக்கிறார். அவர்மூலம் இன்னொரு திடுக்கிடும் செய்தியையும சந்திரமோகன் கேள்விப்படுகிறான அதாவது தலைமறைவாயிருந்த ஒரு கைதியை வேண்டுமென்றே ஆதரித்து அதன்பயனைக் குற்றாலலிங்கமும் சிறை சென்றிருக்கிறார் என்னும் செய்திதான் அது.

சில நாட்களுக்கெல்லாம் தன் அப்பாவைச் சந்திப்பதற்காகச் சாந்தினி வேலூர் சிறைக்கு வருகிறாள். அப்போது அவளுடைய கல்யாண விஷயத்தைப் பற்றிப் பாரிஸ்டர் பரந்தாமன் சந்திரமோகனிடம் பிரஸ்தாபிக்கிறார். அவன் அதற்கு மறுத்ளிக்கிறான்.

இருபத்து நான்காம் அத்தியாயம்

காலத்தின் கோலம்!

பெண்களைப் பற்றி அன்றிலிருந்து இன்று வரை எத்தனையோ பேர் எத்தனையோ விதமான அபிப்பிராயங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களில் சிலர் பெண்களைத் 'தெய்வம்' என்கிறார்கள். சிலர் 'பேய்' என்கிறார்கள். இன்னும் சிலர் 'பெண் ஒரு புதிர்' என்கிறார்கள். வேறு சிலரோ 'பெண்

என்ருல் பெண்தான்!' என்று சொல்லி, தங்களுடைய மூளைகளையும் குழப்பிக்கொள்ளாமல் நம்முடைய மூளைகளையும் குழப்பிவைக்காமல் விட்டுவிடுகிருர்கள்!

தற்காலத் தனிப்பெருந் தமிழ் எழுத்தாளர்களில் சிலரோ தங்கள் தாயார், சகோதரி, மனைவி ஆகியவர்களையெல்லாம்கூட மறந்து, தமிழ் நாட்டுப் பெண்மணிகள் அத்தனை பேரையுமே விபரீதக் கண் கொண்டு பார்க்க ஆரம்பித்து விடுகிருர்கள்!

அவர்களுடைய பார்வையில் ஆண்—பெண் என்ற வித்தியாசத்தைத் தவிர வேறு எதுவுமே தெரிவதில்லை!

அதாவது, இரண்டு கால்கள் கொண்ட பிராணிகளாக இருப்பவர்கள், நான்கு கால்கள் கொண்ட பிராணிகளாக மாறி வருகிருர்கள்!

"இது என்ன கூத்து!" என்ருல், அவர்கள் சமுதாயத்தில் புரையோடிப் போயிருக்கும் புண்களை 'ஆபரேஷன்' செய்து ஆற்றுகிறேம் என்கிருர்கள்!

'ஆபரேஷன்' செய்வதற்கு அனுபவம் வேண்டாமோ? — அதுதான் இல்லை!

இவர்களுடைய கூற்றுக்கு ஆதாரமாக இருப்பதெல்லாம ஒரே ஒரு விஷயந்தான்!

அதாவது, கிழவன் — குமரி கல்யாணம்!

நிச்சயமாக இவர்களுக்குக் கிழவனைப் பற்றியும் ஒன்றும் தெரியாது; குமரியைப் பற்றியும் ஒன்றும் தெரியாது! — ஏதோ தங்கள் மனோராஜ்யத்தில் தோன்றும் விநோத எண்ணங்களையெல்லாம் — சொந்த விருப்பு வெறுப்புக்களையெல்லாம்—ஜீரணமானதும் ஆகாததுமாக வாயிலெடுத்து வைக்கிருர்கள்!

இந்தக் காமாந்தகாரக் கதாசிரியர்களுக்குப் பெண் வெறும் காமக் கருவியாகவே தோன்றுகிருள்!— இவர்களுடைய கதாநாயகிகளுக்குக் காமத்தைத் தவிர வேறு ஜோலியே கிடையாது!

வெறியைப் பசி என்னும் இந்த வீணர்களின் ருசியே அலாதி!— அட, வெட்கக் கேடே!

பாவம், இவர்கள் அனைவரும் தமிழ்நாட்டுப் பெண்களின் அனுதாபத்துக்கு உரியவர்கள்! — ஏன், மணவாழ்க்கையில் பண்பட்ட மக்களின் அனுதாபத்துக்கும் உரியவர்கள் தான்!

இந்த மகானுபாவர்களைப் பற்றி எப்பொழுதாவது பேச நேர்ந்தால் வீட்டிலிருக்கும் பெண்கள் விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்து விடுவார்கள்—இவர்களுடைய அறியாமைக்காகத்தான்! — அசட்டுத் தனத்துக்காகத்தான்!

சாந்தினியும் இதற்கு விதிவிலக்கல்ல; அவள் சிரிப்பது மட்டுமல்ல, கிழவனைக் கல்யாணம் செய்துகொண்டு அமைதியுடன் வாழ்க்கை நடத்தும் எத்தனையோ இளம் பெண்களைப் பற்றிக் கதை கதையாகச் சொல்வாள். "வாலிபக் கணவன்மார்களை விடக் கிழக் கணவன்மார்கள் குடித்தனப் பொறுப்புடன் நடந்து கொள்வார்கள். அது மட்டுமல்ல; பெண்களைத் திருப்திபடுத்தும் விஷயத்திலும் அவர்கள் வாலிபர்களைக் காட்டிலும் அறிவும்



அனுபவம் மிக்கவர்கள்!" என்று வேறு சொல்லி எல்லோரையும் திணற அடிப்பாள்! பொதுவாக, "காமத்தை வளர்ப்பவர்கள் ஆண்கள்; காதலை வளர்ப்பவர்கள் பெண்கள்" என்பது அவள் கட்சி!

இவ்வாறு சொல்கிறவள் குமரி கிழவனைக் கல்யாணம் செய்துகொள்வதை ஆதரிக்கிறாளா என்றால் அதுதான் கிடையாது. ஆனால், அதற்காகக் கிழவனைக் கல்யாணம் செய்துகொள்ளும் குமரிகளெல்லாம் விபசாரிகள் என்று சொல்ல அவள் தயாராயில்லை. அவ்வளவுதான் விஷயம்!

உண்மையும் அதுதானே? அதற்கேற்றாற்போல் நானும் அவளுடன் பழக ஆரம்பித்து இன்று பத்து வருடங்களுக்கு மேலாகிவிட்டன. இதுவரை அவளிடம் நான் எந்தவிதமான காம சேஷ்டையையும் காணவில்லை; அதற்காக அவள் வரிந்துகட்டிக்கொண்டு நிற்கவுமில்லை!

பொறுமைக்குப் பெயர்போன பழந்தமிழ் நாட்டுப் பெண்களில் ஒருத்தியாகவே அவள் இதுவரை எனக்குக் காட்சியளிக்கிறாள்!

எனவே, சிறையிலிருந்து விடுதலையடைந்த பிறகும் நாங்கள் கல்யாணத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை. நானாவது சில சமயம் ஆண்களின் இயற்கையையொட்டிச் சாந்தினியிடம் 'ஒரு மாதிரியாக' நடந்துகொள்ள முயல்வேன். அதற்கெல்லாம் அவள் இடங்கொடுக்க மாட்டாள். சாகசத்துடன் தட்டிக் கழித்து நிலையான ஆத்ம இன்பத்தை ஊட்டுவாள். உடலின்பம் எங்கள் வாழ்க்கையில் என்றுமே

அவ்வளவு முக்கியத்வம்பெற்ற தில்லை. மற்றவர்களுடைய வாழ்க்கையில் எப்படியோ! மனிதனுடைய வாழ்வுக்கும் தாழ்வுக்கும் சந்தர்ப்பங்கள் காரணமாயிருப்பதுபோல, பெண்களின் ஒழுக்கம் கெடுவதற்கும் கெடாமலிருப்பதற்கும் சந்தர்ப்பங்கள் தான் காரணமாயிருக்குமோ, என்னவோ!

இந்தச் செங்கமலம் இருக்கிறாளே, அவளிடம் யாராவது விதவா விவாகத்தைப் பற்றிப் பேசிப்பார்க்கட்டும் — தெரியும் சேதி! தனிப்பெரும்தமிழ்எழுத்தாளர்களின் சீர்திருத்தக்கருத்துக்களெல்லாமவளிடம் தவிடுபொடியாக வேண்டியதுதான்!

பெண்கள் சபலசித்தம் உள்ளவர்கள் என்று சொல்பவர்கள் செங்கமலத்தின் திடசித்தத்தைக் கண்டால் மூர்ச்சை போட்டுக் கீழே விழுந்துவிடுவார்கள். ஆமாம் "மனச்சாட்சி என்று ஒன்று இல்லவே இல்லாத ஆண்களல்லவா தங்கள் மனைவிமார்கள் இறந்ததும் மறுமணம் செய்துகொள்பவர்கள்! பெண்களும் அவர்களைப்போல் வெறிபிடித்து அலைபவர்களா என்ன!" என்பாள் அவள்!

இத்தனைக்கும் வாழ்க்கையில் அவளுக்குச் சோகத்துக்கு மேல் சோகம்—மனித வர்க்கத்தில் கடைசி கடைசியாக அவளுக்கு ஆதரவாக இருந்த ஒரே ஒரு ஜீவன் பாஸ்கரன் தான்; அவனையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பலிகொண்டுவிட்டது!

ஆம், இந்த விஷயம் சிறையிலிருந்துவிடுதலையடைந்தபிறகுதான் எனக்குத்தெரியவந்தது. அலிபுரம் சிறைக்குப் போலீஸ் லாரியில்கொண்டுபோகப்பட்ட அவன் முதுகெலும்புமுறிந்து படுத்த படுக்கையாகி விட்டானும். அதேவியாதியால் பல வேதனைகளுக்குஉள்ளான அவனைச் சர்க்கார் ஆஸ்பத்திரியில் சேர்த்தார்களாம். சேர்ந்த ஐந்தாறு நாட்களுக்கெல்லாம அவனுடைய ஆன்மா சாந்தியடைந்துவிட்டதாம்!

பேதை செங்கமலம் விக்கி விக்கி யழுதுகொண்டே இந்தச் சேதியை என்னிடம் சொன்னபோது நானும் வாய்விட்டுக் கதறிவிட்டேன். யார் என்ன கதறி என்ன பயன்? போனவன் போனவன்தானே?

இந்தத் துக்ககரமான சமயத்தில் செங்கமலத்துக்கு ஆறுதல் சொல்ல நான்தான் இல்லையென்றால் சாந்தினியாவது இருந்திருக்கக் கூடாதா? அவளும் இல்லை. பரிமளாவைப் பார்த்துவிட்டு வருவதற்காக அவள் அப்போது ஊருக்குப் போயிருந்தாளாம். கிழத் தாயாருடனும் ஒரே குழந்தையுடனும் அவள் தன் துயரத்தைப் பகிர்ந்துகொண்டு ஒருவாறு ஆறுதல் அடைந்தாளாம்.

தையல் மெஷினும் தானுமாகப் புனிதவாழ்க்கைநடத்திவந்த செங்கமலத்துக்குப் போதுமென்றமனம் இருந்தது. அதனால் அனாவசியமான ஆசைகள் எதற்கும் அவள் ஆளாகவில்லை. எனவே, அவளுக்குக் கவலையும் அதிகமாக இல்லை. அவளுடைய குழந்தை குமாரலிங்கத்துக்கு இப்போது ஏழு, எட்டு வயதிருக்கும். மூன்றாம் வகுப்பிலோ, நான்காம் வகுப்பிலோ, படித்துக்கொண்டிருந்தான். பிற்கால வாழ்க்கைக்குஅவனைத் தயார்செய்யும் பொறுப்பைச் செங்கமலம் என்னிடம் ஒப்படைத்திருந்தாள்.

அப்போது தேர்தல் பிரசாரத்தில் காங்கிரஸ் ஈடுபட்டிருந்த காலம். பதவியைக் கைப்பற்ற வேண்டுமென்பதில் பலமான போட்டி இருந்தது. அதுவரை தேசத்துக்காக ஒரு துரும்பைக்கூட எடுத்துப் போடாத ஜரிகைத் தலைப்பாகைக்காரர்கள் திருடர்களைப் போலப் புழக்கடை வழியாக வந்து காங்கிரஸில் சேர்ந்தார்கள். கட்சியின் கட்டுப்பாடும் ஒழுங்கும் நாளுக்கு நாள் குலைந்துவந்தது. கட்சிக்குள் கட்சியாகப் பல கட்சிகள் உருவாயின. காந்தி மகாத்மா மனமுடைந்து காங்கிரஸிலிருந்து விலகினார். ஆயினும் வேண்டும்போதெல்லாம் அவருடைய சேவையைக் காங்கிரஸ் விரும்பிப் பெற்று வந்தது.

நானும் காங்கிரஸ்காரன் என்ற முறையில் தேர்தல் வேலையில் தீவிரமாகப் பங்கெடுத்துக்கொண்டு என்னுடைய கடமையைச் செய்து வந்தேன் என்னைப்போன்ற தொண்டர்களுக்கெல்லாம் அப்பொழுதிருந்த ஆசை ஒன்றே ஒன்றுதான். அதாவது, காங்கிரஸ் பெருவாரியான வெற்றியடையவேண்டும்; அந்த வெற்றியைக்கண்டு பிரிட்டிஷ் சர்க்கார் கிலியடையவேண்டும். இந்த ஆசையின் காரணமாக நாங்கள் இரவு பகல் என்று பாராமல் வேலை செய்து வந்தோம். எங்களுக்கு வேண்டிய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் பண்டித ஜவாஹர்லால் நேரு, தீரர் சத்தியமூர்த்தி போன்றவர்கள் அவ்வப்போது அளித்து வந்தார்கள்.

பாரிஸ்டர் பரந்தாமனோ எங்களைப் போன்ற தொண்டராயிருக்கவில்லை. அவர் எப்படியோ அதற்குள் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவராகி விட்டார். அவர் மட்டுமா? தஞ்சை குற்றாலலிங்கமும் தமிழ்நாட்டுப் பிரபலத் தலைவர்களில் ஒருவரானார். இருவரும் சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம் வடநாட்டுப் பிரபலத் தலைவர்களை வருந்தி வருந்தி அழைத்துத் தங்கள் வீட்டில் தங்கச் செய்தார்கள். வீட்டில் இருந்தபடியே பத்திரிகைகளுக்கு அவ்வப்போது அறிக்கைகள் விட்டார்கள். இதனாலெல்லாம் காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டாரால் அவர்களைக் கைவிட முடியவில்லை. மனிதர்கள் என்னதான் மகான்களா யிருந்தாலும் அவர்கள் எப்பொழுதும் தாட்சண்யத்துக்கு ஓரளவு கட்டுப்படத்தான் வேண்டியிருக்கிறது என்பதை அவர்கள் நிரூபித்தார்கள். அதன் காரணமாகத் தேர்தலில் இருவரும் அபேக்ஷகர்களாக நிற்பதற்கு அனுமதி கிடைத்தது. காங்கிரஸ் சார்பில் கழுதையை நிறுத்திவைத்தாலும் வெற்றி பெறும் என்று சொல்லிக் கொண்டுவந்த அந்தக்காலத்தில், அந்தப் புண்ணியன்மார்களுக்கு வெற்றியும் சுலபமாகக் கிடைத்தது

அதற்குப் பிறகு கேட்க வேண்டுமா? தங்களுடைய அந்தஸ்தின் காரணமாக இருவரும் மாகாண மந்திரிகளாயினர். அவர்களுடைய அந்தஸ்துக்கு முன்னால் என்னைப் போன்றவர்களின் சேவை, தியாகம், தேசபக்திக்கு எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன. [தொடரும்]

கண்டேன் இலங்கையை!

—ஏ. பி. சனார்த்தனம்—

இலங்கைத் தீவின் பலபாகங்களில் குகைகளில் பழைய கற்காலக் கருவிகள் கிடைக்கின்றன. எனவே பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னரே இங்கு மக்கள் வசித்தனர் என்பது கண்கூடு.

கிரேக்கரான நூலாசிரியர் தாலமி வெளியிட்டுள்ள இலங்கை நிலப்படத்தின்படி இலங்கை சுமத்ரா அளவுள்ளது. மார்க்கோபோலோவின் படி இலங்கையின் சுற்றளவு 2400 மைல்கள்! மற்றும் பலர் ஆப்ரிக்க நிலபாகத்துடன் இலங்கை ஒட்டியிருந்ததாக முடிவு செய்தனர்.

இராமாயணத்தின்படி இலங்கை இராவணனது நாடு. பாலிமொழியிலுள்ள தீப வம்சம், மகா வம்சம் ஆகிய இரு பௌத்த நூல்கள் இலங்கையின் வரலாற்றை நமக்குத் தருகின்றன.

இலங்கையின் பூர்வீகக் குடிகளின் சந்ததியார் இன்றும் காடுகளில் காணப்படுகின்றனர். அவர்களும் தென்னாட்டுப் பூர்வீகக் குடிகளும் ஒரே மரபினர் எனப் பலர் முடிவு செய்கின்றனர்.

இனிச் சிங்களவரின் வரலாறு யாது? விசயன் என்பான் கி. மு. 480ல் தன் தோழர்களுடன் இலங்கையில் இறங்கினான். விசயனைக் குறித்துச் சுவை மிக்க கதை உள்ளது. லாடதேசத்து அரசனுக்கு ஓர் பெண். அவளுக்கு ஓர் மகனும் மகளும் பிறந்தனர். மகன் தங்கையையே மணந்தான். இருவருக்கும் பிறந்தவன் தான் விசயன். இவன் மிகவும் பொல்லாதவன். விசயன் தொலைந்தால் போதும் என எண்ணிய மன்னன் இவனையும் இவனது தோழர்களையும் கப்பலில் ஏற்றி நடுக்கடலில் விட்டான். நாவாய் கடலில் பலநாள் அலைந்து, புயலிடைத் தப்பியும், அலையிடைப் பிழைத்தும் கடைசியில் இலங்கைக்கரையை அடைந்தது. அப்போது நாகர்களும் இயக்கர்களும் இலங்கையை ஆண்டுவந்தனர். விசயன் இயக்கத் தலைவியாகிய குவேணியை வென்று அவளையே மணந்தான். ஆனால், இலங்கையை வென்ற விசயன் மன்னனாக முடியவில்லை. குவேணி அரசமரபில் பிறவாததால் விசயன் மன்னனல்ல எனச் சாத்திரம் தீர்ப்புக் கூறியது. விசயன் பாண்டியனுக்குத் தூதனுப்பி அங்கிருந்து ஓர் அரசிளங் குமரியை அழைத்து மனைவியாக்கிக்கொண்டான். முடி கிடைத்தது. எனவே ஆரிய விசயனும், பாண்டியப் பெண்ணும் சிங்களவரின் மூதாதையர்—இந்தக் கதைப்படி.

விசயன் காலமுதல் 16-ம் நூற்றாண்டில் போர்த்துக்கீசியர் நுழைவு வரை பெரும்பாலும் சிங்கள மன்னர்களே இலங்கையை ஆண்டனர்.

பேர் அரசோச்சியதாம் அறிகி றோம். இவர்களில் மிகச் சிலரே சிறபபெய்தியவர். சிங் களமெங்கும் சிதறிக் கிடக்கும் ஆயிரக் கணக்கான கோவில் களும், அரண்மனைகளும், இவர் களது நினைவுச் சின்னங்களால் விளங்குகின்றன, தமிழருக்கு அஞ்சி ஐந்து முறை தலை நகரை மாற்றினர். குறைக் கும், தீப்பந்தத்துக்கும் இரை யான நகரங்களும் உண்டு.

பழைய காலத்திலிருந்தே தமிழர் சிங்களத்தில் குடிபுகுந் தனர். வாணிபம் செய்தனர். சேனன், குடினன் என்ற இரு வர் (அண்ணனும் தம்பியும்) கி' மு. 177-ல் சிங்களத்தின் அரசுக் கட்டில் ஏறினர். 'ஏலேல சிங்கன் பொருள் எங்கே போட்டாலும்போகாது' என்பது பழமொழி. வாய்மை மிக்க ஏலேலன் வள்ளுவரின் நண்பன். வணிக மன்னன்! அவன் கி. மு. 145-ல் இலங் கையை வென்றான். பாட்டால் தன்னை மகிழ்வித்த காஞ்சி யாழ்ப்பாணனுக்கு இவன் இலங்கையின் வட பகுதியைப் பரிசிலாக அளித்தான். அது தான் யாழ்ப்பாணம்.

கி. மு. 44ல் பாண்டிய வீர ரின் படையெடுப்பு நிகழ்ந்தது. மன்னன் தலை நகரைவிட்டு ஓடிவிட்டான். வீரர் ஐவர் அனுராதபுரத்தைத் தலை நகராகக் கொண்டு ஒருவர் பின் ஒருவ ராக இலங்கையை ஆண்டனர்.

கற்பரசி கண்ணகிக்குக் கல் லெடுத்த நேரத்தில் செங்குட் டுவச் சேரனிடம் இலங்கை அரசன் கயவாது வந்த செய்தி நமக்கெல்லாம் தெரிந்ததே. ஆண்டுகள் கணக்கிடுவதில் (*Chronology*) குழப்பமடைந்த இந்திய வரலாற்று வல்லுன ருக்கு இது மிகவும் சிறந்த உதவியாயமைந்தது.

முதலாம் ராஜேந்திர சோழன் (*A. D. 10-14-44*) இலங்கை முழுவதையும் வென்றான்.

சிங்கள மன்னர்களில் மிகச் சிறந்தவர்கள் தூதுகே. முனு, (*161–136 B. C.*) பராக்கிரமபாகு (*A. D. 1153–86*) ஆகியோர்.

*16*ம் நூற்றாண்டில் போர்த் துக்கீசியர் இலங்கைக்கு வந் தனர் (*1597*). கடற்கரைப் பகுதிகளை வென்று சுமார் *150* ஆண்டுகள் ஆதிக்கம் செலுத்தினர். கத்தோலிக்கப் பாதிரிமார் பல்லாயிரவரை சேசு சமயத்தில் சேர்த்தனர்.

1628–ல் டச்சுக்காரர் போர்த்துக்கீசியரை விரட்டி விட்டனர். யானைகளையும் முத் துக்களையும் ஏற்றுமதிசெய்து பெருத்த இலாபம் அடைந்த னர். பல நல்ல பாதைகளை அமைத்தனர். கால்வாய்களை வெட்டினர். *1597*-ல் ஆங்கிலே யர் டச்சுக்காரரை விரட்டினர்.

கண்டி அசர்கள் போர்த்து கீசியருக்கும் டச்சுக்காரருக்கும் சிக்கவில்லை. கடுகன்னுவா கண வாயைக் கடந்து கண்டியை அடைவது மிகவும் சிரமமா யிருந்தது. மலையும் காடும் கண்டி அரசரின் இயற்கை அரண்கள். கடைசியாக *1815*ல் கண்டி அரசர் வேலூ ருக்கு அனுப்பப்பட்டார். நாடு முழுதும் யூனியன் ஜாக் நிழ லில் வந்தது. படிப்படியாக உரிமை வழங்கப்பட்டது. கடைசியாக *1948*-ம் ஆண்டு பிப்ரவரி நாலாந்தேதி சிங்கள நாட்டில் சிங்கக்கொடி பறந் தது. இப்போது இலங்கை காமன்வெல்த்தில் அங்கம்வகிக் கிறது. ○

பாரதிதாசன் பரம்பரை

வாழ்வு


அன்றொருநாள் நண்பகலில் உணவருந்தி விட்டு
அழகாக உடையுடுத்தி அலுவலகம் சென்றார்
என்சொல்வேன் என்கணவர் சென்றசில மணியில்
இடியெனவே செவிமடுத்தேன் 'இறந்துவிட்டார்' என்றார்
அன்புருவாய் அமைந்திருந்த கணவர்பலி யானார்
அடுத்துவந்த கூற்றுவனும் மோட்டார் மோதிற்றாம்
நன்றுநன்று வாழ்வுலகில் நவிலும்நிலை யாமோ
நாதர்உயிர் நீத்தபின்பு என்கதிதான் என்னே?

"எழில்பூத்த இவ்விருவர் ஆண்டுபல வாழ்வார்"
எனமொழிந்த சோதிடனின் ஏற்புரைதான் எங்கே?
பழிதவிர ஏதுகொள்ளும் சாத்திரங்கள் வேறு
பகர்வீரே உலகோரே என்வாழ்வைப் பார்த்தே!
இழிமொழிகள் ஏன்கூறார் சீர்திருத்தக் காரர்
இதுபோன்ற சாத்திரங்கள் இருக்கும்வரை நாட்டில்?
விழியெல்லாம் நீரொழுக விதவைநிலை யுற்றேன்
"விதி"யென்பார் இந்நிலையை மதிகுறைந்த வீணர்

பெண்களுக்குச் சமஉரிமை வேண்டுமெனக் கூறும்
பேச்சாளர் எங்குசென்றார்? வாயடைத்தேன் போனார்?
பெண்களுக்கும் ஆண்களுக்கும் தனித்தனியே நீதி
பிறந்திருக்கும் இந்நாட்டில் சமஉரிமை வேண்டின்
பெண்களுக்கு மறுமணமும் சொத்துரிமை தானும்
பெறும்வகையைச் செய்வதின்றிப் பேச்சளவில் நின்றால்
என்றிந்த நாட்டினிலே பெண்ணினத்திற் கமைதி?
எதிர்காலச் சிற்பிகளே! எடுத்துரைக்க வாரீர்!

[தோழர் ஷரீப் மதுரையைச் சேர்ந்தவர். அமெரிக்கன் கல்லூரி மாணவர். கைம் பெண் ஒருத்தி நிலையிலே இருந்து கொண்டு வாழ்வின் ஏமாற்றத்தைப் பாடுகிறார். ஆசிரியர்]





மின்னல்

இளமைப்பித்தன்

அந்தக்குளத்தை வெட்டி எத்தனையோ ஆண்டுகளாகி விட்டபோதிலுங்கூட அதற்கு இன்னமும் 'புதுக்குளம்' என்ற பெயர் தான் வழக்காற்றிலிருந்து வருகிறது! மண்ணுக்கடியில் புதைந்து கிடந்த சதுரமான பெட்டியை வெளியிலெடுத்து விட்டால் அந்த இடம் எப்படியிருக்குமோ, அதைப்போல அமைப்பு! நல்ல விசாலமான போக்கில் கரைகளின் நான்கெல்லை. துறவியின் மனம் சில வேளைகளில் சிற்றின்பத்தில் இறங்குகிற மாதிரி, கரையின் மீதிருந்து சரிந்து தண்ணீரைத் தொடும் படித்துறைகள். எதிலும் பற்றின்றி, தன்னை மறந்து மோனத்திலாழ்ந்திருக்கும் யோகியை நினைவுபடுத்தும் நீராழி மண்டபம்! கிழக்கரையின் மேல் நின்று பார்த்தால் தொலைவில் தோன்றும் சுடுகாடு; அநேகமாக, வாரத்தில் நான்கு நாளுக்கொருதரம் அந்தச் சுடலையில் உயிர்கழன்று ஓடிப்போன உடல்கள், சிதையின் மேல் கொஞ்சங் கொஞ்சமாக வெந்துகருகும்போது கனன்று தாவும் தீயின் வெளிச்சம்......... அதையும் தாண்டி னல் புதைகுழிகள்!

ஓ! மனித வாழ்வு கடைசியில் இவ்வளவுதானு?' என்று மனதில்தெறித்தோடும் விரக்தி—நிராசை! திரும்பிப் பார்த்தால்............கதிரவனின் ஒளிபட்டு மின்னிப்புரளும் நீர் அலைகள். எதிர்க்கரையின் மேல் காற்று வாங்குவதற்காக உலாவும் மனித உருவங்கள். சற்று இடது புறமாகக் கண்ணைச் சாய்த்தால், வான் தகட்டை முட்டுவதற்காக ஓடும் விவிலிய ஆலயத்தின் கூரான கோபுர முனைகள்! ஒருவேளை, பரமண்டலத்திலிருக்கும் பரமபிதாவான தேவரீரின் கால்களையாவது பார்த்து விட வேண்டுமென்ற ஆசையோ என்னவோ அவைகளுக்கு பூகம்பத்தால் பூமிக்குள் பாதிவரை புதைந்திருக்கும் நகரத்தைப் போலக் கட்டிடக் குவியல்கள்.

இப்பொழுது இருப்பதைப் போல் அல்ல அப்பொழுது அந்த இடம். எவ்வளவோ மாறுதல்கள் — 'பார்க்' 'மெர்குரி விளக்கு' ரேடியோ — எல்லாம் சமீபத்தில்தான் வந்து

குடியேறின! நகரம் செழிப் படைந்து கொண்டு வளருகிறது என்பதன் சின்னங்களாக இருக்கலாம்! ஆனால் மேற்புறக் கரையிலிருந்து ஊருக்குள் ஊடுருவிப் போகும் வீதி-சந்துக்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள் — கரையில் இறங்கி நடக்க ஆரம்பித்து விட்டாலோ... சிச்சி! வாழ்க்கை எவ்வளவு பயங்கரமானது என்பதை எடுத்து — அருகில் இழுத்துச் சொல்லும் சமூகத்தின் சாக்கடைகள்! இந்த இலட்சணத்தில், ஊரின் அழகு வளர்கிறதென்று யாரால் சொல்லமுடியும்?

அதோ நீளப் போகிறதே ஒரு வீதி, அதில் சென்று வலதுகைப் புறமாகத் திரும்பிக் கொஞ்ச தூரம் சென்றால் அடுக்கடுக்காய் அமைந்திருக்கும் வீட்டுத் தொடர்ச்சியில் கூன் விழுந்த முதுகுமாதிரி ஒரு வீடு! வாசலில் இரண்டு நடுத்தரமான திண்ணைகள். அதை ஒட்டினாற்போல ஒரு சன்னல். கறையான் அரித்த மரக்கட்டைகள் போக எஞ்சி நிற்பது இரும்புக் கம்பிகள் தாம். அதற்குள் உற்று நோக்கினால், அடிக்கடி கனவுகளில் மிதந்து குழி பாய்ந்த கண்களையுடைய ஒரு ஒடுக்கு விழுந்த முகம் தென்படும். இன்னும் கொஞ்சம் உள்ளே போய்ப் பார்த்தால் இருபத்தைந்தாவது வயதின் எல்லையை எட்டிப் பிடிக்கும் ஓர் மெலிந்த உருவம் வறண்ட புன்சிரிப்பை வலுவில் வரவழைத்துக்



கொண்டு போகிறவர்களை வர வேற்கும்!

முன் கட்டில், பழைய காலத்தின் நினைவுச் சின்னங்களாக மிளிரும் பெஞ்சு, கால் ஆடிப்போன ஒரு நாற்காலி, தூசும் தும்பும் படிந்த மேசை! அதன் மேல் காகிதக் குப்பைகளும், மேலட்டை கிழிந்துபோன புத்தகங்களும்......... சில வேளைகளில் சிகரட்டின் புகை கவிந்து மணத்தைப் பரப்பும்......தரையின்மேல் நசுங்கிப்போன சிகரெட் பிணங்கள்...! பின் பாகத்தில் 'இது வீடுதான், அமைதி நிலவும் ஆசிரமம் அல்ல' என்பதை எடுத்துக் காட்டக்கூடிய பாத்திரங்களின் ஒலி. நான் இன்னும் சாகாமல் — வாழ்க்கையில் நம்பிக்கைப் பிடியைத் தளரவிடாமல் — பிடித்துக் கொண்டிருக்கிறேன் என்று சொல்லுவதைப்போல ஓர் பெண் உருவம் ஓடியாடி வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறது!

ஆமாம்! அது ஓர் இளம் எழுத்தாளனின் வீடு! ஆனால் அவனுடைய சித்தாந்தப்படி பார்த்தால் அது வீடல்ல 'மனிதன் சுடுகாட்டில் மாத்திரம் செத்துப் பிணமாகி விடவில்லை. அவன் மரணத்தை நாளுக்கு நாள் வீட்டிற்குள் நடித்துப் பழகிக்கொண்டு தான் கடைசியில் மூக்சொடுங்கிப் போய் வெளியேறுகிறான்!' என்றதிடநம்பிக்கையுள்ளவன். தான் சுகமடையாமல், இரவு, பகலாக உழைத்துப் பிறரை மகிழ்விக்கப்பாடுபடுகிறோமென்று கனவு காணும் மனம் படைத்தவனைச் சமூகம் 'முட்டாள்'என்றுதானே சொல்லும். சொல்லாவிட்டாலும் நினைக்காமலா இருக்கிறது?

அவன் எப்படி எழுத்தாளனாக மாறினான்?

அந்தப் பயங்கரமான உலகிற்குள் எதற்காகப் போனான்? வாய் விட்டுச் சொல்ல முடியாதவைகளை, எழுத்துக்களின் மூலமாக வெளியிடலாமென்று? முட்டாள்! பைத்தியக்காரன்! அழுது வடிவதற்கு வேறு இடம்கிடைக்கவில்லையா அவனுக்கு? இலக்கிய உலகம் தானா அகப்பட்டது! மலை மீதிருந்து சரிந்து விழும் அருவி ஆறுய்ப் பெருகி ஓடுவதைப் போல, தெறிபட்ட உள்ளங்களிலிருந்து பாயும் எண்ணங்களால் தானே எழுத்துலகம் கெட்டுத் தொலைந்தது. நல்ல தண்ணீரா அங்கே ஓடுகிறது! சே! நச்சு ஆறு!

அதில் போய்க் கால்வாய் மாதிரிக் கலந்த இந்த இளம் எழுத்தாளன் என்ன வாழப் போகிறான்? இவனுக்கும் கேடு காலம் பிடித்து விட்டது! இனிமேல்...... ஒரே பிலாக்கணம் தான்! இலக்கிய உலகம் பயங்கரமாக இருக்கிறதென்று சொன்னால், ஏன் இருக்காது!

சில ஆண்டுகளுக்கு முன்னால்..............

ராமச்சந்திரன்–இளம் எழுத்தாளனாக வாழ்கிறவன் — ஒரு 'மாஜி' பள்ளி மாணவன். அதாவது படிப்பை முடித்துக் கொண்டு, ஏகாந்தமான இடங்களில் அமர்ந்து எதிர்கால வாழ்க்கைக்குத் திட்டம்போடுகிற நிலைமை!

புதுக்குளம், மாலை நேரங்களில் அவனுக்குச் சொர்க்க பூமியாக விளங்கி வந்தது!



கையில் ஏதாவது ஒரு புத்தகம்— கொள்மடை மதகுச்சுவர் தான் சாய்மானம்! வானில் சுதந்திரமாகப் பறந்து திரியும் பறவையைப்போலத் தாவித் திரியும் மனம்! கண்கள், கீழ்த்திசையின் வான வளையம் வரையில் சென்று சென்று திரும்பிவரும்! இரவு வெகுநேரம் வரையில் அவன் அங்கே இருப்பான்! தினசரி, இந்தப் பழக்கம் — பைத்தியம் — அவனுக்கு உண்டு!

ஒரு நாள்!

ராமச்சந்திரனுக்கு மனம் கட்டுக்கடங்கவில்லை. சுடலையில் பிணம் எரிந்துகொண்டிருந்ததால் காற்றில் பிண நாற்றம் கலந்திருந்தது. மேற்குப்புறக் கரையின்மேல் வந்து உட்கார்ந்திருந்தான்!

வானத்தில் முழு நிலவு! வெள்ளிக் கதிர்கள் தண்ணீரின் மேல் படர்ந்திருந்தன! ஏறக்குறைய இரவு ஏழரை மணி இருக்கும்! கூட்டம் அவ்வளவாக இல்லை!

'கடங் — கடங் — கட, கட' வென்ற ஒலி! அதைத் தொடர்ந்து கைவளையல்கள் குலுங்கி ஓய்கின்றன!

ராமச்சந்திரன் திரும்பிப் பார்த்தான்!

படித்துறையில் ஒரு பெண் கால் நொடித்துக் கீழே விழுந்து கிடந்தாள். குடம் தண்ணீருக்குள் மூழ்கிக்கொண்டிருந்தது! உடனே ஓடிப்போய்க் குடத்தை எடுத்துக்கொடுத்து அவளைத் தூக்கி நிறுத்துகிறான்! இருவருடைய உடல்களிலும் ஏதோ மின்சாரம் அடித்த மாதிரி ஒருவித அதிர்ச்சி!

அவளுக்குக் காயம் இல்லை!

ராமச்சந்திரனின் மனத்தில் காயம்பட்டுவிட்டது!

ஒருவர் முகத்தை ஒருவர் ஒருவர் நன்ருகப் பார்த்துக் கொள்ள நிலவு வெளிச்சம்! அன்று இதற்காகத்தான் முழுநிலவா!

"உங்கள் பெயர் என்ன? நீங்கள் செய்த உதவியை நான் என்றைக்கும் மறக்கமாட்டேன்" என்று பேசுகிருள்.

"பெயர் எதற்கு? மறக்காமலிருந்தால் அதுவேபோதும்" என்று மனம் தடுமாறிச் சொல்லுகிருன் ராமச்சந்திரன்!

இருவருடைய கண்களும் கனவு காண்கின்றன!

இரத்த அழுத்ததின்போது துடிக்கும் இதயத்தைப் போல உள்ளங்கள் பட படத்துக் கொள்ளுகின்றன!

என்னவோ ஒரு வித மயக்கம்!

இருவரும் பிரிந்து செல்லுகிருர்கள்!

பிறகு...

அவர்கள், தினசரி, குடம் விழுந்த வேளையில் தவருமல் சந்திக்கிருர்கள்! சந்தடியற்ற இடங்களில், தனித்துப் பேசுகிருர்கள். கரைகளின் மேல் கொஞ்ச தூரம் தயக்கத்துடன் சேர்ந்து உலாவுகிருர்கள்!

வார்த்தைக்கு வார்த்தை ராமச்சந்திரன் 'வசந்தாவின்'— அவள் பெயர்- பெயரைச் சொல்லி 'ஜபம்' செய்கிருன்!

வாழ்க்கை-இலட்சியம்-கனவு எல்லாமே உண்மையாகத் தோன்றுகின்றன! அவளுக்கும் அப்படித்தான்!

புகைவண்டித் தொடர்மாதிரி ஆண்டுகள் ஒன்றின் பின் ஒன்ருகக் கோர்த்துக் கொண்டே போகின்றன!

அதில் ஆண்டுக் குறி எண்கள் மறந்துபோன ஒருபெட்டி. வெள்ளைத் திரையில் விழுந்த கரும் புள்ளி மாதிரி!

அந்தச் சன்னல் வழியாக இரண்டு முகங்களைப் பார்க்கிருன்!

ஒன்று ஆண்—புதிய முகம்! மற்ருென்று?

வசந்தா—நினைவு முகம்!

வேறு வழி?

வண்டி நகர்ந்து ஓட ஆரம்பித்துவிட்டது! கண்ணுக்குத் தெரியாமல்-அடிவானத்தைத் தொட ஓடிக்கொண்டிருக்கும் ஒற்றையடிப்பாதையைப்போல அவள் போய்விட்டாள்!

மீண்டும் — தனிமை — ஏக்கம் சித்தப் பிரமைபிடித்துப்போய் விட்டால்கூடத் தேவலாம் போலத் தோன்றுகிறது அவனுக்கு! நேராக வீடுநோக்கித் திரும்புகிருன். கட்டுக் கட்டாகக் கதைகள் குவிகின்றன.

திரும்பவும்—புதுக்குளம்—அதன் விசாலமான கரைகள்.

ராமச்சந்திரன் தினம் போகிருன், வருகிருன். எத்தனையோ பெண்களும் வந்து போய்க்கொண்டுதான் இருக்கிருர்கள்! அவனுக்கு மன ஒளி குன்றிவிட்டது!

அதற்கப்புறம் — திருமணம் — குடும்பம்—குழந்தை— எல்லாமே தொடர்கின்றன! ஏதோ வாழ்கிருன் நடைப்பிணம் போல—இயந்திரம்போல!

புதுக்குளக்கரை சோபிதத்துடன் திகழ்கிறது இப்போது என்ருலும், ராமச்சந்திரனுக்கு இவையொன்றும் பிடிக்கவில்லை. அவனுக்குப் புதிய 'மெர்குரி விளக்கு' வேண்டாம். கணநேரமாக இருந்தாலும் அந்த 'மின்னொளி' தான்வேண்டும்!



உயர்திரு உல்லாசம் அவர்களுக்கு

9. தெருக்கூத்து சிவனாண்டி

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

"இந்த லட்சணத்தில் நாடகம் எப்படியிருக்கும்?" என்று நான் இடை மறித்தேன்.

"நாடகமா? நாடகமேடையே ஒரு கள்ளுக்கடையாகத்தான் இருக்கும்!" என்று சொல்லிக்கொண்டே ஏழாவது பாட்டிலைக் காலி செய்தான் சிவனாண்டி.

'நாடகம் ஒரு தினுசாக நடந்துகொண்டிருக்கும் கோவலனோ கழுத்தில் விழுந்த மாலையைக் கழற்ற முடியாமல் கதறிக்கொண்டிருப்பான். அந்தச் சமயத்தில் மாதவியும் மாமாவும் உள்ளே போய்விடுவார்கள்'.

"ஸ்டேஜிலே, கோவலன் கதறுவதைக் கண்டு மனம் பொறுக்கமாட்டாத சிலர் "மாதவியை வரச் சொல்" என்று கூச்சலிட்ட பிறகுதான், இங்கே ஒவ்வொருவரும் "மாதவி! மாதவி!" என்று மாதவியாக வந்த மாரியம்மாளைத் தேடுவார்கள். ஆனால் மாதவி கண்ட்ராக்டர் காளிமுத்துவின் மடியில் இருப்பதை யார் கண்டார்கள்? உடனே மாமா ஸ்டேஜுக்கு வந்து மாதவி வரும் வரைக்கும் 'லெடன் லேடி' காமிக் நடத்துவார் – இல்லையென்றால் ஆர்மோனியக்காரர் 'பண்டித மோதிலாலைப் பறிகொடுத்த' பாட்டைப் பாடுவார்.

"இப்படித்தான் நாடகம் சுவைபாக நடக்கும். நடிப்பு – மருந்துக்குக்கூட இருக்காது. நான் சொன்ன இரண்டு நாடகங்களிலும் "கண்ணகி — மாதவி", "வள்ளி — தெய்வானை" சக்களத்திப்போராட்டம்தான் முக்கிய அம்சம். நாடகம் முடியும். அதே நேரத்தில் பீப்பாயும் காலி செய்யப்படும்

'இப்படித்தான் அன்றைய நாடகங்கள் பொதுமக்கள் மனதைக் கவர்ந்தன. ஒரு சமயம் எங்கள் கம்பெனி கொக்குச் சேரிக்கு விஜயம் செய்து அங்குள்ள சிங்காரக் கொட்டகையை முற்றுகையிட்டது. நாடக விளம்பரங்கள் பறக்க ஆரம்பித்தன.

"நான் நடேச பிள்ளையிடம் கெஞ்சிக் கூத்தாடி எனக்காக ஒரு சிறு வேஷம் வாங்கிக் கொண்டேன். அன்றிலிருந்து பறையடிக்கும் தொழிலைவிட்டு விட்டு நடிக்க ஆரம்பித்தேன். ஏதோ, முதலில் குடிகாரன் வேஷம் கொடுத்தார்கள். அன்றைக்கு என் நடிப்பு மிகவும் அபாரம் என்று புகழ்ந்தார்கள். உண்மையில் அன்றைக்கு நான் நிஜமாகவே குடித்துவிட்டுத்தான் மேடைக்குப் போனேன். அடுத்தபடி திருடன், வஞ்சிப் பத்தன், பபூன் இப்படியாக நான் நடிப்பிலே முன்னேறிக்கொண்டிருந்தேன்.

"ஒருநாள் மணி ஆறு இருக்கும். அடுத்த நாடகத்தை எப்பொழுது ஆரம்பிப்பது என்று எல்லோரும் ஆலோசித்துக்கொண்டிருந்தோம். அப்போது ஒரு வேலைக்காரன் வந்து மாமாவாக நடித்துக்கொண்டிருந்த மாடசாமிக்குக் காலராக் கண்டுவிட்டதாகக் கூறினான். உடனே எல்லோரும் ஆத்திரத்தோடும் எழுந்தார்கள். 'ஏன் இதை எங்களுக்குக் காலையிலேயே சொல்லவில்லை?' என்று கடுகடுத்தார்கள் 'டிக்கட்டுகளெல்லாம் விற்பனையாகிவிட்டதே, இனி என்னசெய்வது? 'என்று எல்லோருமாகச் சேர்ந்து மாடசாமியையும் அவனுக்கு 'முன் அறிவிப்பு நோட்டீஸ்' கொடுக்காமல் வந்த காலராவையும் வாயாரத் திட்டினார்கள்.

"பிறகு ஸெலக்ஷன் கமிட்டி கூடி, மாமாவாக நடிக்க என்னையே தேர்ந்தெடுத்தார்கள். நானும் எனது நன்றியைத் தெரிவித்தேன்.

"அன்றைய நாடகம் ஆரம்பமாகியது. கோவலன், கழுத்தில் விழுந்த மாலையைக்கழற்ற முடியாமல் கதறிக்கொண்டிருக்கும்பொழுது மாஜி 'மாமா' மாடசாமியின் உடல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதாகச் செய்தி வந்தது. நடேச பிள்ளைக்கு இன்னும் ஆத்திரம் தணியவில்லை. 'என்னிடம் சாகப் போவதாக ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் என் நாடகத்தையே குட்டிச் சுவராக்கப் பார்த்தானே, கொலைபாதகன்' என்றுமேலும் திட்டிக்கொண்டே இருந்தார்

"பபூன் வேஷத்தை நான் பல நாளாகப் போட்டிருந்தால் எனக்கு மாமாவாக நடிப்பதில் கஷ்டம் ஒன்றும் தெரியவில்லை. மாடசாமியைக் காட்டிலும் எனக்கு அதிகப் பேரும் புகழும் கிடைத்தது. பல ஊர்கள் சுற்றினோம். பல இடங்களில் எங்களுக்கு நல்ல வரவேற்பு. எங்கும் எங்கள் கம்பெனியைப் பற்றிய பேச்சுத்தான்! ஆனால் எனக்கு மட்டும் ஒரே குறை! எனக்குச் சம்பளம் பழைய சம்பளமே தந்தார்கள். இது எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. இதைப்பற்றி நடேச பிள்ளையிடம் சொல்ல, சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

"ஒரு சமயம் நாங்கள் நரிப்பட்டிக்குத் 'தண்டு' இறங்கியிருந்தோம். அதுதான் எங்கள் நாடகக் கம்பெனியின் கடைசி காம்ப். முதல் நாள் நாடகமானது நரிப்பட்டி மிட்டாதார் தலைமையில் ஆரம்பமாகியது. மாதவி, மாலையை வீச, கோவலன், கழுத்தில்

விழுந்த மாலையைக் கழற்ற முடியாமல் கதறிக்கொண்டிருந்தார். இப்பொழுது நான் மேடைக்குச் செல்லவேண்டும். யோசித்தேன். சம்பளத் தகராறைத் தீர்த்துக்கொள்ள இதுதான் தக்க சமயமென்றெண்ணி, ஒரு ஓரத்தில், கண்ணகியோடு கதை பேசிக் கொண்டிருந்தேன்.

"நேரம் ஆக ஆகக் கூட்டத்திலிருந்து 'ஏ! மாமா! வெளியே வா' என்ற கூக்குரல் அதிகமாகியது. கோவலன் உடனே தனது கதறலை நிறுத்திக் கொண்டார். நடேசபிள்ளை என்னிடம் பரபரக்க ஓடி வந்தார்—மாதவியோ சமயோசிதமாக, 'மாமா வரக்காணேனே' என்றுபாட ஆரம்பித்து விட்டாள்"

"என்னப்பா சிவனாண்டி, மேடைக்குப் போ, கூச்சல் அதிகமாகுதே" என்றார்.

"இது என்னங்க ஞாயம்? கோவலனுக்கு இருபது ரூபாய் சம்பளம். எனக்கு மட்டும் பத்து ரூபாய். நான் எந்த விதத்தில் அவனை விடக் குறைந்துவிட்டேன்?" என்று கேட்டேன்.

"ஐயோ, மிட்டாதார் கோபித்துக் கொள்வாரப்பா, சீக்கிரம் மேடைக்குப்போ" என்று கதறினார். ஆனால் நானா விடுபவன்?

"கோபித்தால் எனக்கென்ன? முதலில் சம்பளத் தகராறைத் தீர்த்துவையுங்கள்" என்றேன். பிள்ளைவாள் அயர்ந்து விட்டார்.

"சரி, நீ மேடைக்குப் போ, இன்றிலிருந்து உனக்கு இருபது ரூபாய்" என்றார்.

"அதெல்லாம் முடியாதுங்க சீட்டு எழுதிக் கொடுத்தால் தான் முடியும்" என்றேன்.

"சிவனே" என்று தலையில் அடித்துக்கொண்டு சீட்டு எழுதிக் கொடுத்தார்.

"நாடகம் முடிந்தது. நான் முகத்தைக் கழுவிக்கொண்டிருந்தேன். பிள்ளை என்னிடம் வந்தார். 'என்னப்பா சிவா! பணப்பெட்டியைப் பார்த்தாயா? எந்தப்பயலோ எடுத்துக்கொண்டு போய்விட்டானே' என்று பதறினார். என்னை ஏமாற்றுவதற்குத் தான் இந்தக் கதை என்று உடனே புரிந்துகொண்டேன்.

"மறுநாள் நாடகத்தில் நான் ஒன்றும் சண்டித்தனம் செய்யவில்லை. மாதவி கோவலனிடம் பத்துலட்சம் பொன் கேட்டுக் கொண்டிருக்கையில் நான் பணப்பெட்டியை எடுத்துக்கொண்டு அந்த ஊரை விட்டே கம்பி நீட்டிவிட்டேன். என் அதிர்ஷ்டம்! அன்று நாடகத்தில் திருடர்கள் வரும் கட்டத்தில் அவர்கள் வைத்திருக்கும் தீவட்டி சிங்காரக் கொட்டகையை எரித்துவிட்டதாம். நானும் கையிலிருந்தவற்றைச்செலவழித்துவிட்டுக்காடு மேடெல்லாம் சுற்றியலைந்து கடைசியில் இங்கு வந்துசேர்ந்தேன்" என்று தன் கதையை முடித்தான் சிவனாண்டி.

காலி சீசாக்கள் பதின்மூன்றையும் கடைக்காரனிடம் ஒப்படைத்துவிட்டு இருவரும் வெளியேறினோம். இதோ! இவன் தான் சிவனாண்டி! பார்த்துக்கொள்ளுங்கள்.

வணக்கம்

வழிப்போக்கன்

திட விரதம்

-சுலோசனு-



[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

ராமு எழுந்தான். அவனால் நடக்கமுடியவில்லை. "இரு, இரு...நான் தூக்கிக் கொள்கிறேன்!" என்று மொழிந்த மனோ அவனை லாவகமாகத் தூக்கிக்கொள்ளவே ராமுவுக்கு ஒரே ஆச்சரியமாக விருந்தது. அவளது கழுத்தைக்கெட்டியாகப் பற்றிக் கொண்டு, "ஏன் மாமி, உங்களுக்கு எவ்வளவு பலம்!...மாமி! உங்க மேலே எனக்கு ரொம்பப் பிரியம்! அம்மாவாட்டம் இருக்கிறீங்க!" என்று கொஞ்சிக் கொண்டு அவள் முகத்தோடு தன்முகத்தைச் சேர்த்துக் கொண்டான். ஏனோ மனோவின் கன்னங்களில் கண்ணீர் வழிந்தது! அதே கணத்தில் ஏதோ ஓர் பாசம் தன்னையும் அக்குழந்தையையும் சேர்த்து விட்டதென்று அவள் உள்மனம் அறைகூவிற்று.

4

ராமுவின் வீடு மிகவும் சிறியதேயாயினும் சுத்தமாக விருந்தது. ஒரு கூடம்—சமையலறை—முன்கட்டு; இவ்வளவுதான். கூடத்தில் சுவரோரமாக ஒரு கட்டிலும் ஓரிரண்டு நாற்காலிகளும் காணப்பட்டன. மனோ ராமுவைக் கட்டிலில் படுக்க வைத்தாள்.

"ராமு! உங்கப்பா உன்னைத் தனியாக விட்டுவிட்டுப் போகிறாரே, நீ குறும்பு செய்யாமலிருப்பாயோ? உங்கப்பாவிற்குக் கவலையாகவிருக்காதா உன்னைப் பற்றி?" என்று கேட்ட மனோ சமையற்கட்டை எட்டி நோக்கினாள்.

"அதனாலே தானே வேறே 'ஒரு அம்மா' வைக் கட்டிக்கணும்னு அப்பா ஆசைப்படறார்! வேறே 'அம்மா' வந்துட்டா என் குறும்பு அடங்கிப் போகும். இல்லையா மாமி?" என்றான் ராமு சிரித்துக் கொண்டே. மனோவின் உள்ளம் ஏனோ படபடவென்று அடித்துக் கொண்டது.

ராமு மீண்டும் பேசினான். 'மாமி! நீங்கதான் எங்கம்மாவாட்டம் இருக்கிறீங்க! எங்கமா குறுப்பு......நான் அப்பாவைப் போல...ஏன் மாமி, உங்களுக்குக் கல்யாணமே ஆகலியா?"

"இல்லேடா கண்ணே. இன்னும் இல்லே..."

"ஏன் மாமி ஆகலே?"

"ஏனோ? யாருக்கும் பிடிக்கலையாக்கும் என்னை!"

"போங்கோ மாமி, பொய்! பொய்! அப்பா உங்களைக் கட்டிக்கிட்டா என்ன?"

மனோவின் இருதயமே நின்றுவிட்டாற்போலிருந்தது. முகத்தில் குபீரென்று இரத்தம் பரவியது.

"உஷ் ராமு, இப்படியெல்லாம் பேசக்கூடாது...!" என்று அதட்டினாள்.

"பேசினா என்னவாம்?...மாமி மாமி! நீங்கமாத்திரம் எங்கம்மாவா வந்துட்டா எவ்வளவு நல்லாயிருக்கும்...நான் அப்பாகிட்டே சொல்லட்டுமா?"

மனோ திடுக்கிட்டாள்.

"ராமு! நீ இப்படியெல்லாம் பேசினால் நான் உன்னோடே பேச மாட்டேன்... சண்டை போட்டு விடுவேன். தெரியுமா...? கெட்ட பிள்ளை நீ!"

ராமுவின் கண்களில் நீர் கசிந்தது. "மாமி..." என்று அழ ஆரம்பித்து விட்டான். திடுக்கிட்ட மனோ குனிந்து அவன் பட்டுப்போன்ற கன்னத்தில் ஓர் முத்தமிட்டாள். அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டு, "மாமி என் கண்ணல்ல!" என்றான்.

அதேசமயம் 'சர் சர்' என்று வெளியே செருப்புச்சத்தம் கேட்கவே, மனோ திடுக்கிட்டு எழுந்தாள். "அப்பா வந்துட்டார்!" என்றான் ராமு எழுந்து உட்கார்ந்துகொண்டே.

சுமார் 35 வயதுள்ள ஆடவர் ஒருவர் உள்ளே நுழைந்தார். எதிர்பாராதவிதமாக ஓர் அயல் வீட்டுப் பெண்ணை வீட்டிற்குள் கண்டதும் திடுக்கிட்டு நின்றார். அவளை விழித்துப் பார்த்தார் வியப்புடன். இருவர் கண்களும் சந்தித்தன.

ஒரே கணத்தில் அவரது உருவத்தை மனத்திற்குள் பதித்துக் கொண்டாள் மனோ. ஐந்தே முக்கால் அடி உயரம். கட்டுமஸ்தான தேகம். வாரிவிட்ட அழகான கிராப். கம்பீரமான தோற்றம். அழகியமுகம்!

அவர் எங்கே-மனோ எங்கே?

குழந்தை ராமுதான் அவர்களிருவரின் திகைப்பையும், சங்கடமான நிலையையும் தீர்த்து வைத்தான். அப்பாவிடம் செய்தியை விரிவாகக் கூறி முடித்தான்.

அவர் அவளை நன்றியோடு நோக்கினார்.

"தேங்ஸ்...மிஸ். மனோமணி! இவனது வழக்கமே இதுதான். எங்காவது சென்று கையைக் காலை முறித்துக் கொண்டுதான் வருவான். தாய் இல்லை பாருங்கள்! கண்டிக்கவும் யாருமில்லை..." என்று கூறிச்சிரித்தார். மூவரும் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்தனர்.

கடைசியில் தப்பித்தோம் பிழைத்தோமென்று விடை பெற்றுக் கொண்டு ஓடி வந்து விட்டாள் மனோ!

5

அன்று முதல் மனோவும் சுந்தரமும் - ஆம் - அவர் தான் ராமுவின் தந்தை — அடிக்கடி சந்தித்து அளவளாவி வந்தனர். ஆற்றோரமாகத்தான். மனோவின் தந்தையிடம் கூடப் பரிச்சயமாகிக் கொண்டார் சுந்தரம். ராமுவுக்கோ மனோவைக் கண்டால் ஒரே ஆனந்தம். 'மாமி—மாமி' என்று மகிழ்ச்சியுடன் அவளைச் சுற்றி சுற்றி வருவான்.

சுந்தரம் தன்மீது 'ஒரு கண்' வைத்திருப்பது மனோவிற்குப் புரிந்ததெனினும் தனது வைராக்கிய சபதத்தை மீறுவதை அவள் விரும்பவில்லை. சுந்தரம் அழகிய ஆடவர்தான். பெண்களின மனத்தைக் கொள்ளை கொள்ளும் சக்தி அவருக்கிருந்தது. அவர் தனக்குக் கிட்ட வேண்டுமானால் அது தான் செய்த தவப்பயனாகவே யிருக்குமென்பது அவளது எண்ணம். 'கறுப்பி—குரூபி என்று எல்லோராலும் இகழப்பட்டவளுக்குச் சுந்தரத்தைப்போன்ற கட்டழகன் கிடைப்பதென்றால் அது வியப்பேதானல்லவா? அனல் மனோவிற்கோ தனது திடவிரதத்தைப் பங்கம் செய்து கொள்ள விருப்பமில்லை. ஆகவே எங்கேயாவது தன் விரதத்தை அவர் முறித்துவிடுவாரோ என்று அவள் அஞ்சியதால் கூடிய மட்டும் அவரது கண்ணினின்று தப்பவே அவள் முயன்று வந்தாள். இளமையில் தன்னை நிராகரித்த ஆண்குலத்தினின்றே தப்ப அவள் விரதம் பூண்டவளல்லவா?

அன்று விடுமுறையின் கடைசி நாள். கடைசி முறையாக ஆற்றோரம் உலவச் சென்ற மனோ எதிர்பாராதவிதமாகச் சுந்தரத்தைக் கண்டாள். தன்னைச் சந்திப்பதற்காகவே அவர் காத்து நிற்கிறாரென்று அவளுக்குத் தெளிவாயிற்று.

இருவரும் ஒரு அடர்ந்த புதரின் சமீபமாக அமர்ந்து கொண்டனர். சுந்தரம் அன்று தன் உள்ளத்தைத் திறந்து காட்டினார். தான் அவளை மணந்து கொள்ள விரும்புவதாகவும், தாயற்ற தன் குழந்தைக்கு அவள் தாயாக வரவேண்டுமென்றும், ராமுவிற்கு அவளிடம் அளவற்ற பிரியமாதலால் அவளையன்றி வேறு யாரையும் தான் மணந்து கொள்வது பொருத்தமில்லையென்றும் கூறினர்.

மனோ மணத்திற்கு மறுத்துவிட்டாள். இல்லறவாழ்க்கையில் அடிபடத் தன்னால் முடியாதென்றும், தான் உண்டு-தன் அப்பா உண்டு-என்று இருவரும் நிம்மதியாக வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருப்பதாகவும், தான் சுதந்தரமாக வேலை பார்ப்பதையே விரும்புவதாகவும் கூறி விட்டாள்! சுந்தரம் ஏமாற்றம் நிறைந்த உள்ளத்தோடு அவளைவிட்டுப் பிரிந்தார். மனோ மனத்திற்குள் ஆடவரைத் திட்டிக்கொண்டே தன் வீட்டிற்குச் சென்றாள்!

வீட்டிற்குள் நுழைந்த மனோ நேரே தனது அறைக்குள் சென்று பெட்டி படுக்கைகளைக் கட்ட ஆரம்பித்தாள். அவள் மனத்தில் புயல் வீசிக்கொண்டிருக்கிறதென்பது செயலில் நனகு தெரிந்தது!

சுந்தரத்தின் கவர்ச்சியான முகம் அவள் முன்னே தோன்றி 'விரதத்'தை முறித்து விடுவதாகப் பயமுறுத்தியது! எனினும் மனோ வெற்றிபெற்று விட்டாளல்லவா! தன்னை மணந்து கொள்ளும்படி வலியக் கேட்டார்; தான் மறுத்தாய் விட்டது! இனிபயம் எதற்காக?

பருவகாலத்தில் தான் இல்லற இன்பத்திற்காக ஏங்கிய போது எவனும் எட்டிப்பார்க்க

வில்லை! அந்தக்காலம் மலையேறி விட்டது. இப்போது மனோ கவலையற்ற சுதந்திர வாழ்வு வாழ்கிறாள். இனிமேல் ஒரு பொன்மலைத் தொழிலாளியைக் கட்டிக் கொண்டு மாரடிக்க அவளால் முடியாது!

யாரோ கதவைத் திறக்கும் ஓசையைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள் மனோ. ராமு உள்ளே நுழைந்து கொண்டிருந்தான். அவனது அழகியமுகம் புன்னகை பூத்திருந்தது. அவனைக் கண்ணுற்றதும் மனோவிற்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அதற்குள்ளாக அவன் தாவி வந்து அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டு, "மாமி! மாமி! எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாய் இருக்கு மாமி! உண்மையாக நீங்க தானே எனக்கு அம்மாவா வரப்போறீங்க? சொல்லுங்களேன் மாமி!" என்றான்!

மனோவிற்குக்கோபம் வந்தது. அவன் கரங்களை அப்புறப் படுத்திவிட்டு, "என்னடா உளறுகிறாய்? இப்படிப் பேசக்கூடாதென்று உனக்கு எத்தனை தடவைசொல்வது? போக்கிரி!" என்றாள் வெடுக்கென்று. என்றுமில்லாத அவளது சினத்தைக் கண்டு குழந்தை வெலவெலத்துப் போனான். அவனது மலர்ந்தமுகம் ஒரு நொடியில் வாடித் தொங்கி விட்டது.

"என் மாமி கோபிக்கிறீங்க? உண்மையாக நீங்க தானே இனி என் அம்மா? அப்பா சொன்னாங்களே!" என்றான் தட்டுத்தடுமாறியபடியே.

மனோவிற்கு ஆத்திரம் பொங்கிற்று. கேவலம் ஒரு பெண்ணின் சம்மதத்தைப் பெறத் தனது சொந்தக் குழந்தையையே 'தூது' அனுப்பிய சுந்தரத்தின மீது அவளுக்குக் கோபம் அளவு கடந்து விட்டது.

"உங்கப்பா ரொம்ப கெட்டிக்காரர் தான்! இப்படித்தான் குழந்தையைச் 'சேதி' சொல்ல அனுப்புவதாக்கும்...? போடா போ!" என்றாள் படபடப்போடு.

ராமுவின் பெரிய கண்களில் நீர் தளும்பியது. விசித்துக் கொண்டே, "அப்பா ஒன்னும் என்னை அனுப்பலை! நானே தான் வந்தேன. இன்னிக்குச் சாயங்காலம் அப்பா உங்ககிட்டே கல்யாணம்பண்ணிக்கக் கேட்கும்போது நான் புதருக்குப் பின்னால் ஒளிஞ்சிருந்து கேட்டேன்! எனக்கு ஒரே ஆனந்தமாய் விட்டது. அப்படியே நாலைஞ்சு குட்டிக்கரணம் போட்டு நானே கொம்மாள மடிச்சுக்கிட்டேன். அப்புறம் வீட்டுக்கு வரபோது அப்பா முகத்தைத் தொங்கப்போட்டுக் கொண்டு என்னோடு ஒண்ணுமே பேசாதது எனக்குப் புரியல்லே... அப்புறம் தான்...மாமியண்டையே போய்க்கேட்டுட்டு வந்தால் தீர்ந்ததுன்னு வந்தேன். அப்பாவும என்னோடு பேசவில்லை. மாமியும் இரைஞ்சு விழறிங்க...எங்கம்மா என்னை அழைச்சிக் கல்லையேன்னு வருத்தமாருக்கு......! மாமியை அம்மாவாட்டம் நினைச்சேன்... ஆனா...மாமிக்குத் தான் என்னைப் பிடிக்கலே...!" என்றான். அவன் கண்களினின்று கண்ணீர் முத்துப் போல் உருண்

அறிவிப்பு

இதுவரை மதுரையில் விளம்பரம் சேகரிப்பதற்கு எங்கள் பிரதிநிதியாக இருந்துவந்த P. துரைராஜ் என்பவர், விலக்கப்பட்டுவிட்டபடியால், வணிகர்களும் பொதுமக்களும் அவருடன் பொன்னி சம்பந்தமாக எவ்வித தொடர்பும் வைத்துக்கொள்ள வேண்டாமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பொறுப்பாளர்,
பொன்னி அலுவலகம்,
புதுக்கோட்டை 17-6-49

போடியது. தேம்பித் தேம்பி அழுதான். மனோவின் உள்ளம் கசிந்துருகியது. வேதனையின் கண்ணீர் பெருக்கெடுத்தது. திடவிரதம் சுக்குநூறாய்ச் சிதறியது!

'ராமு! ராமு! அழாதே கண்ணே! அழமாட்டேன்னு சொல்லு! மாமி நல்ல மாமியல்லவா.!'' என்று அலறிக் கொண்டே அவனை வாரியெடுத்து மார்போடு அணைத்துக்கொண்டாள். இருவர் கண்ணீரும் கலந்தது.

''மாமி...இனிமே...நீங்க மாமி இல்லே. தெரிஞ்சுதா? அம்மாவாக்கும்!'' என்றான் ராமு!

ராமுவின் கையைப்பற்றிக் கொண்டு அவனது வீட்டை நோக்கி நடந்தாள் மனோ-சுந்தரத்திடம் தனது 'எண்ணத்தைக் கூறி மன்னிப்புப் பெற!

அவர்கள் எட்டி வருகையிலேயே கண்டுகொண்ட சுந்தரம் அவசர அவசரமாக வெளியே இறங்கி அவர்களை நோக்கி வந்தார். ராமுவின் மகிழ்ச்சி பொங்கும் முகத்தையும். மனோவின் நாணத்தின் ரேகை படர்ந்த முகத்தையும்கண்டார். அவருக்கு உண்மை விளங்கிற்று!

தனது திடவிரதம் தோல்வியுற்றதனால் மனோ வருந்தவில்லை—வெட்கப்படவில்லை.

குழந்தை ராமுவிற்காக அந்தத் தியாகத்தைச் செய்ததனால் அவள் பெருமையே கொண்டாள். தாய்மையை விரும்பும் எந்தப் பெண்தான் அதற்காகப் பெருமை கொள்ள மாட்டாள்? ○



பெட்டியிலே சுருண்டகருஞ் சாரைப் பாம்பாய்ச்
சடையிருக்கு மவளுக்கு; பின்னல் மீதோ
எட்டிப்பார்த்தே சிரிக்கும் சீய்த்து வானில்
எழுமதியாய்க் கொண்டைமலர்; கருப்புச் சாந்துப்
பொட்டிருக்கும் முழுநிலவாய்; அவள்மை தோய்ந்த
புருவத்தின் நெளிவினிலே அட்டா! இன்பம்
சொட்டுகின்ற விழிபாயும்; என்ற னுள்ளச்
சோர்வகற்ற அவள்வருநன் னாளெந் நாளோ!

பல்லிருக்கும் மாதுளையின் வித்தைப் போலப்
பழச்சாற்றைப் பிழிந்தெடுத்துத் தேனில் சேர்த்த
சொல்லிருக்கும் அவள்வாயில்; என்பேர் கேட்டுத்
துடிதுடிக்கும் செவ்விதழ்கள்; கலையின் நுட்பம்
வல்லார்போல் கழுத்திருக்கும்; உடல்நோ யூட்டும்
வாட்டத்தைத் தீர்க்கஅவள் முனையும் போது
கல்லைப்போல் ஒன்றுவந்து குறுக்கே நிற்கும்;
களிப்பூட்ட அவள்வருநன் னாளெந் நாளோ!

இடையிருக்கும் துடியைப்போல்; எடுத்த மார்பென்
இதயத்தை அரித்தரித்து நினைவைத் தேய்க்கும்
நடையிருக்கும் மயிலைப்போல்; முறுவல் பாயும்
நல்லிதழில் குடியிருக்கும் தமிழ்த்தேன் இன்பம்;
கடைக்கண்ணில் அருளிருக்கும்; அவள்தன் னுள்ளம்
கணித்திருக்கும் என்வரவை; பிரிவில் நெஞ்சம்
துடிதுடிக்கும் நிலைகண்டே என்னைத் தேடித்
தோகையவள் அணைக்கவரு நாளெந் நாளோ!

உள்ளத்தில் அணைத்தென்னை இதழில் இன்பம்
ஊட்டுகின்ற நினைவிருக்கும் அவளுக் கென்றும்;
கள்ளமிலா அவற்முகத்தின் எழிலி லென்றன்
கற்பனையின் ஊற்றிருக்கும்; வாழ்க்கைச் சேற்றுப்
பள்ளத்தில் வீழாது தடுத்தாட் கொள்ளும்
பரிவிருக்கும்; விழிப்பிருக்கும்; கார்கா லத்து
வெள்ளத்தைப் போலவள்மேல் வெறிகொண் டோடும்
விருப்பத்தைத் தணிக்கவரு நாளெந் நாளோ!

உடையிழந்தோன் கையைப்போல் என்னைத் தாவும்
உணர்விருக்கும்; விழிகுளிரும்; முல்லைத் தேனின்
அடையிதழ்கள் கசிந்தின்பம் சொட்டச் சொட்ட
அத்தானென் றெனையழைக்கும்; மார்பு விம்மும்;
மடைகாக்கும் நாரையைப்போல் நான்வந் தேகும்
வழிபார்க்கும் பொற்பிழம்பு; ஆஹ லென்றன்
உடைமனத்தின் புண்ணாற்றிக் கவிஞர் நாட்டில்
உயர்த்தியெனை வாழ்விக்கும் நாளெந் நாளோ!



இருபத்திரண்டாம் அத்தியாயம்

அந்தக் கடிதம்!

பாதுஷா தமது தனியறையில் நுழைந்ததும் அவருக்கு அந்தக் கடிதத்தின் நினைவு வந்துவிட்டது. அதனை மீண்டும் ஒருமுறை எடுத்துப் படித்தார். அவரால் அதனை நம்பவும் முடியவில்லை, நம்பாமலும் இருக்கமுடியவில்லை! இங்கும் அங்கும் உலவிக் கொண்டே அதனைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தார்.

அந்தக் கடிதத்தின் கீழ் அமீன்சந்த் என்று கையொப்பமிட்டிருந்தது. பாதுஷாவிற்கு அமீனசந்த்தை நன்ருகத் தெரியும்! அவனிடத்தில் அதிக நம்பிக்கையும உண்டு. அவன் என்னதான் எழுதியிருந்தான்? உண்மையில் அது மிகவும் முக்கியமான செய்தி!

பாதுஷாவின் பாதகமலங்களுக்கு அடியேன் அமீன்சந்த் ஆயிரங்கோடி சரணங்கள்...... தொடக்கமே இப்படித் துதிபாடல்! உள்ளிருந்த ஒவ்வொரு எழுத்திலும் பலப்பல தொடர்கதைகள் புகுந்து மறைந்து புதைந்து கிடந்தன ஆம். ஒவ்வொரு எழுத்திலும் இரகசிய மூச்சு சிறிக்கொண்டு வந்தது!

ஸிராஜ்-உத்-தௌலாவின் வார்த்தைகளை நம்பவேண்டாம். அதுவும் முடினகானின் நச்சுப் பொய்களை நம்பி விடாதீர்கள்! அவர்கள் வந்தது மதிப்பிற்குரிய சுபேதார் அலிவர்திகானுக்கே தெரியாது. அப்படியானல் அவர்களின் போக்கினைப் புரிந்து கொள்ளுங்கள்.

அவர்கள் நம்பிக்கைத் துரோகிகள். அலிவர்திகானைக் கொல்லவும் அஞ்சமாட்டார்கள். அவர்களின் எண்ணமெல்லாம் வங்கத்தின் அரசுரிமை! அலிவர்திகானின் நட்புள்ளம் வெள்ளைய வியாபாரிகளுடன் சமாதானத்தை நாடுகிறது. இந்தப் பொல்லாதவர்களே அலிவர்திகானை வீழ்த்த முனைகிருர்கள். ஆனல் வெள்ளையர்கள் சுபேதாருடன் சேர்ந்து கொள்கிருர்கள் என்ற எண்ணத்தால் அவர்களைப் பகைத்துக் கொள்கிருர்கள்.

உங்களிடம் அவர்களுக்கு மதிப்போ, பயமோ இருக்கிறது

என்று கருதுகிறீர்களா? வங்கத்தையே தனியே துண்டித்துக்கொள்ளத் தவிக்கிறார்கள்.

......இப்படி ஓடியது!

அலிவர்திகானுக்கு இவர்கள் வந்ததுகூடத் தெரியாதாம்! எப்படி நாம் அதனைத் தீர்மானிப்பது? ஆனால் வெள்ளைக்காரப் பிரச்சினை சிறியது. அதுவும் உள்நாட்டு விவகாரம்! அதைக் கலந்து பேசிட இவ்வளவு தூரம் வருவானேன்? அப்படியே வந்தவர்கள் வெள்ளைக்காரர்களைப் பற்றி நான் குறைத்துப் பேசியும் அவர்கள் பரிந்து பேசுவானேன்?——

பாதுஷாவின் மனம் இப்படிக் கேள்விமேல் கேள்வி எழுப்பிக் கொண்டிருந்தது. ஆனால் அவரால் ஒரு முடிவிற்கும் வரமுடியவில்லை! எப்படி வரமுடியும்? வந்திருப்பவர்களோ சுபேதாரின் சொந்தப் பேரனும், அவனது நண்பனும். கடிதம் எழுதியிருப்பவனோ ஒரு சாதாரண வியாபாரி! எழுப்பப்பட்டுள்ள பிரச்சினையோ உயிர்த்திட்டத்தைப் பற்றியது! நடவடிக்கைகளோ விசித்திரமாக உள்ளன! இந்தக் குழப்பமான நிலையில் அவர் என்ன செய்வார்! தடுமாறினார்....

அந்தக் கடிதம் அவரைப் பார்த்துச் சிரித்தது!

மீண்டும் சிந்தித்தான்.......

சரி, இப்பொழுது இந்தப் பிரச்சினையை எழுப்பவே கூடாது. சந்தேகம் எழுந்திருப்பதாகவே காட்டிக்கொள்ளவே கூடாது! ஸுராஜுக்கு நல்ல விருந்து நடத்தவேண்டும். அவனுக்கு மகிழ் ஊட்டும் எல்லா ஏற்பாடுகளையும் வெற்றிகரமாக முடிக்கவேண்டும்.

பிறகு ஸுராஜுவைத் தனியாக அழைத்து இந்தக்கடிதத்தைக் காட்டிக் கேட்கவேண்டும். அவன் இந்தக் கடிதத்தைப் படிக்கும் பொழுது அவனது முகமாற்றங்களை உன்னிப்பாக நோக்கவேண்டும் அவனது உள்ளத்தைப்புட்டுப் பார்த்து விட்டுப் பிறகுதான் ஒரு முடிவிற்கு வரவேண்டும்.

——இப்படி நிதானம் நீதி சொன்னது!

இந்தப் புளுகர்களை உடன் சிறையில் தள்ளவேண்டும். சிறையிலே தள்ளி விட்டுத் தக்க வெகுமதிகள் தரவேண்டும்.

முகலாய பாதுஷாவை மூண்டம் என்று எண்ணிக் கொண்டார்கள் இந்த எத்தர்கள். என்னிடமே ஏமாற்று வார்த்தைகளை வீசி, என் படையைத் துணைகொண்டு பட்டம்பெற்று வங்கத்தின் 'சட்டாம்பிள்ளைகளாகப்' பார்க்கிறார்கள். மதிகெட்டவர்களின் நரித் திட்டத்திற்கு மண்டையில் அடி கொடுக்கவேண்டும்.

——கோபம் உமிழ்ந்த முடிவு இது!

உடனே ஸுராஜுவை அழைத்துக் கேட்டு விட்டால், என்ன தலை மூழ்கிவிடும்?

——அவசரம் இப்படித் தாண்டியது!

பாதுஷாவின் மனம் ஒரு போர்க்களமாகி விட்டது! அங்கு நிதானம், ஆத்திரம், கோபம், சாந்தம், அடக்கம், அவசரம், பொறுமை, படபடப்பு — இப்படிய பலபேர் ஒருவரோடு ஒருவர் மோதிக் கொண்டனர்! பாதுஷா என்ன செய்வார்? திக்கு முக்காடிப் போனார்.



இருபத்து மூன்றாம் அத்தியாயம்

‘கவலையைத் தீர்ப்பது!’

சோணியைக் கண்டதும் ஸ்வராஜ் துள்ளிக் குதித்தான். முமன் முகத்தைச் சுளித்தான். அவன் வரவு அவனுக்கு மகிழ்ச்சி தரவில்லையென்று தெரிந்தது!

சோணி வந்தான். எதிரிலிருந்த இருக்கையில் அமர்ந்தான்! அதற்குள் அங்கு நின்றிருந்த ஒரு அடிமைப் பெண் ஒரு கோப்பையை நீட்டினாள். அதில் வாயருந்தினான்.

‘உமக்கு இந்த இடம் எப்படித் தெரிந்தது?”

“இந்த இடம் என்ன, அண்டத்தின் எந்த மூலையிலிருந்தாலும் கண்டுபிடித்துவிடுவேன்”

“அவ்வளவு சூரரோ?”

“அந்த அசகாய சூரனையும் ஏமாற்றி விட்டீர்களே!”

என்ன...—!

வீரர்கள் விழித்தனர். தங்களைப் புரிந்துகொண்டான் என்று தெரிந்து கொண்டு திணறினர்.

“நீங்கள் சுபேதாரின் அடுத்த வாரிசு ஸ்வராஜ் என்று நேற்

றுத் தான் தெரிந்து கொண் டேன்."

"அப்படியா—?"

"தாங்கள் தான் வீரர் முடீன் கான் என்று புரிந்து கொண் டேன்."

சோணி இப்படிக் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த ஸுராஜுக்கு அவசரந் தாங்க முடியவில்லே! உடனேயே இர ஜினியைப் பற்றிக் கேட்டு விட வேண்டுமென்று அவன் நாக் குத் துடித்தது! அதற்கேற் ருற்போல் முடீன் கூறினுன்.

"வைர வியாபாரியாரே, நீங்கள் சொன்னீர்களே இரஜினி அவள் இன்று ஆடப் போகிருள். இருந்து பார்த்து விட்டுப் போங்கள்."

"பருப்பில்லாமல் கல்யாண மா?"

மூவரும் சிரித்தனர்!

"அது மட்டுமல்ல, இரஜினி வருங்கால சுபேதாரை வரவேற் கத் தவிக்கிருள். இன்று அவள் இல்லம் தங்கள் வரு கையால் புனிதமடையப் போ கிறது!"

"என்ன, நீரே முடிவுகட்டி விட்டீரே!"

"அதற்காகத்தானே என்னே அனுப்பினுள்!"

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருக்கையிலேயே, காவ லன் ஒருவன் வந்து நின்ருன். கொலு மண்டபத்து நிகழ்ச்சி யைக் குறிப்பிட்டுவிட்டு வருகை தரவேண்டுமென அரசாங்க அழைப்பையும் அளித்துவிட்டு வெளியேறினுன்.

மணி ஓடியது. மங்கையர் வந்தனர்!

ஆடை, அணி வகைகளேப் பூட்டினர். அழகு பார்த்து முடியை வைத்தனர். பட்டு மேலங்கியைப் போர்த்தினர். மணத்தைப் பூசினர்.

பிறகு அவர்கள் தங்கள் விருந்து மாளிகையை விட்டு மணி மண்டபத்தையடைந்த னர். அங்கு ஏற்கனவே எல் லாப் பிரமுகர்களும் வந்து குழு மியிருந்தனர். ஊர்ப்பொது மக் கள் ஏராளமாகத் திரண்டிருந் தனர்.

ஸுராஜுவையும், முடீன் கானேயும் கண்டதும் மண்டபத் தில் ஆரவாரம் எழுந்தது. வாழ்த்து முழக்கங்கள் மேகத் தோடு மோதின! இந்த வர வேற்பைப் பார்த்துத் திகைத் துப் போனுன் சோணி. அவர் களே மந்திரிகள் வரவேற்றனர். தங்கத் தவிசுகளில் அமரச் செய்தனர்.

பாதுஷா வந்தார்!

தர்பார் இராகத்தில்வரவேற் புக் கூறினுன், பராக்குக் கூறு வோன். மற்றவர்கள்'வாழ்க' போட்டனர். எழுந்து நின்று மரியாதை தெரிவித்தனர்.

பாதுஷா, தன்னேப் பாம்பின் வாயிலிருந்து காப்பாற்றிய வீரன் ஸுராஜுவைத் தழுவிக் கொண்டார்' பிறகு அவையோ ரைக் கம்பீரமாகப் பார்த்தார்.

"அவையோரே, இந்த வீரன் வங்கம் தந்த சிங்கம். தங்கக் கம்பி தான் குணத்தில்! மலேப் பாம்பு என்னேச் சுற்றி வளேத் துக் கொலே செய்யத் துடிக்கை யில் இந்த வீரனது வாள் வெட்டித் துணித்தது அந்த நச்சரவை!

"எனக்கு உயிர் கொடுத்த உத்தமன், முகலாய வம்சத் தின் சுடரொளியைக் காத்த வித்தகன். இவன் புகழ் ஓங்குக."

பாதுஷா பேசிய பாராட்டுரை இது!

பாதுஷா மீண்டும் அவையை நோக்கினுர். அமைச்சரைப் பார்த்தார்.

"இனி தொடங்கட்டும் ஆட்டம்." என்றுர்!

ஆ, அங்கே மின்னல் பலவால் பின்னப்பட்ட 'மான்' ஒன்று வந்து நின்றது! அது, பாயாத புள்ளிமான்! ஆம், இராஜினிதான் மேடையிலே தோன்றினுள். அவளது பேரழகு யாரையும்மயக்கிவிடும். வைத்த கண்கள் வாங்காமல் பார்த்தனர். "தோள்கண்டார், தோளே கண்டார்" என்று இங்குதான் பாடவேண்டும்! அழகு என்னும் பேழையில் இளமையென்னும் வைரமாலே மறைத்து வைக்கப்பட்டது போன்றது தான் அவளது அங்க அமைப்புகளும், அவைகளில் 'கதகளி' செய்யும் இளமையின் பூரிப்பும்!

அவளை ஸுராஜ் பார்த்தான். அவளும் பார்த்தாள்!


அவள் ஆடினுள், அவனது உள்ளம் பாடிற்று! ஆம்.மணிமண்டபத்தின் நடு வட்டத்தில் ஆடினுள்! ஆனல் உண்மையில் அங்கு கூடியிருந்தோர் அனைவரின் இதயங்களிலும் ஆடிக்கொண்டிருந்தாள்! ஸுராஜுவின் மனம், சதுர் மேடையைப் போல அடிக்கடி அதிர்ந்தது!

'கவலையைத் தீர்ப்பது நாட்டியக் கலையே' என்ற பாட்டிற்கு அவள் ஆடினுள். அவள் அங்குள்ளோரின் உள்ளங்களை உருக்கிவிட்டாள்! பாதுஷாவின் கண்கள் களிப்பைக் கக்கின.முடிவினில்நெஞ்சும் மகிழ்ச்சியில் அமிழ்ந்து எழுந்தது. இராஜினியின் ஆட்டம் அன்று அபாரமாக அமைந்துவிட்டது என்று எல்லோரும் எண்ணிவிட்டனர்.

ஆட்டம்தீர்ந்தது. ஸுராஜுவின ஆசைப்பசிதொடங்கியது!

அவள் விடைபெற்றுள். தன் விழிவெட்டால் ஸுராஜுவின் இதயத்தைப் புட்டுப்போட்டு இரத்த வெள்ளம் பெருகச் செய்துவிட்டுபபோய்விட்டாள். "பொருளே பொற்கொடியாள், போருளே" என்று பாடிற்று அவனது ஏங்கிய மனம்.

அவை கலைந்தது. பாதுஷா வீரரிருவரையும் அழைத்துக் கொண்டு வெளியில் சென்றுர், சோணிசந்த் தனது தந்திர வேலே பலிக்காது போலிருக்கிறதே என்று எண்ணமிட்டான் தனது கடிதம் வேலே செய்யவில்லையே என்று ஏமாந்தான். பிறகு அவர்கள் பின் சென்றுன்! (தொடரும்)



வளரும் இலக்கியம்

மகிழ்ச்சி

மாதப்பத்திரிகை. ஆசிரியர் நா. சதானந்தம். விருதுநகர் சதானந்தாப் பதிப்பக வெளியீடு. என். எஸ். கிருஷ்ணன், நல்லை அ இளங்கோவன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோரின் கருத்தோவியங்களும், வள்ளுவரின் உயிரோவியமும் முதல் இதழை மணம் கமழச் செய்கின்றன. விலை 2 அணா.

முருகன்

மாதப்பத்திரிகை. ஆசிரியர் ஆர். எம். எஸ். மணியம். வெள்ளி அட்டையின் நடுவில் அழகிய மணிக்கூண்டுடன் அட்டை மிளிர்கின்றது. சினிமாச் செய்திகளும் கட்டுரை கவிதைகளும் இருக்கின்றன. விலை 8 அணா. முருகன், தெற்கு 3, புதுக்கோட்டை.

நாசகார சமூகம்

இதன் முதற் பதிப்பிற்கே மதிப்புரை எழுதியிருக்கிறோம். எம். என். ராய் சிலவழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் சார்பாக வாதாடி, அவர்கள் குற்றம் செய்யக் காரணம் சமூக அமைப்பே என்று விளக்கிக் காட்டுகிறார். தமிழாக்கம்: ஜோதி மோகன், அறிவுச்சுடர் பதிப்பகம், துறையூர். விலை 8 அணா

நேருவின் இந்தியா

பெற்ற சுதந்திரத்தைக் காப்பாற்ற வேண்டிய நேரத்தில் வகுப்பு வாதக் குழப்பத்தை உண்டாக்கும் மத வெறியர்களின் அட்டூழியங்களையும், அவற்றைச் சமாளித்து நடைபெற்று வரும் அரசாங்கத்தைப் பாராட்டியும், அவ்வரசாங்கத்திற்கு மக்கள் ஒத்துழைக்க வேண்டிய இன்றியமையாமையையும் இப்புத்தகம் எடுத்துக்கூறுகிறது. ஆசிரியர்: சக்தியூகம். தமிழ்நாடு நியூஸ் ஏஜன்சி, நாகர்கோயில் விலை 2 அணா

உல்லாசிகள் ஒழிக!

குறுநில மன்னர்கள், குருக்கள் மார்கள், மடாதிபதிகள், சினிமாக் கலைஞர்கள் முதலிய உல்லாசிகளின் பொல்லாத செயல்களையும், அவர்கள் ஒழிய வேண்டிய தேவையையும் எடுத்துக் கூறுகிறார் ஆசிரியர். உணர்ச்சி நிறைந்த அடுக்குத் தொடர்கள் படிக்கச் சுவையாயிருக்கின்றன. ஆசிரியர்கள்: சிவாஸ்கிதாசன், சுந்தர சிதம்பரம். புதுமைப்பித்தன் நினைவுப் பதிப்பகம், திருப்பூர். விலை 5 அணா

கொதிக்கும் இரத்தம்

சென்ற இதழிலே கோதாவரி என்ற ஒரு புத்தகத்தைப் பார்த்தோம். இப்பொழுது கொதிக்கும் இரத்தத்தைப் பார்க்கிறோம். இந்த ஆசிரியர்கள் எப்படித்தான் மனந்துணிந்து இப்புத்தகங்களைக் கவிதை என்ற பெயரில் வெளியிடுகிறார்களோ தெரியவில்லை. ஆசிரியர்: அ. வெ. ரமணி. இயற்கை வெளியீடு. திருநாகேச்வரம், கும்பகோணம். விலை 8 அணா

கண்டெடுத்த குழந்தை

சிறுவர்களுக்கான கதைகள். ஒவ்வொன்றும் நல்ல கற்பனை. நல்ல பதிப்பு. ஆசிரியர்: ஆர். காந்தன், பாலர் மலர் நிலையம், புதுக்கோட்டை விலை 4 அணா

அசோகன்

போரினல் மக்கள் படுந்துன்பத்தையுணர்ந்த மாமன்னன் அசோகனின் வீழ்ச்சிக்குப் பாதக ஆரியர் செய்த படுசூழ்ச்சியையும், குப்தர் என்ற துறவி அவரைச் சூழ்ச்சியினின்றும் கரையேற்றுவதையும் சித்தரிக்கும் நாடகம் ஆசிரியர்: பா. பாண்டிய குமாரன் இன்ப நிலையம் சங்கர்நகர், மதுரை. விலை ரூபா 1.

வரப்பெற்றோம்.

ஜமீன்தார் மகள்: ராஜன் எழுதியது ஜில் ஜில் பதிப்பகம், ஜி. டி. சென்னை 1. விலை 3 அணா

சந்திரவளையர்: மஞ்சேரி ஈச்வரன் எழுதியது, சக்தி காரியாலயம், ராயப்பேட்டை சென்னை 1, விலை 1 அணா

அதிர்ஷ்ட தேவதை: லக்ஷ்மி எழுதியது. சக்தி காரியாலயம், விலை 1 அணா

முடியாது: அணில் அண்ணன் எழுதியது, சக்தி காரியாலயம், விலை 1 அணா

மஞ்சுளா: எஸ். பி. நாயுடு எழுதியது. ரோஸ் பதிப்பகம் முதல் அக்ரகாரம், சேலம் டவுன், விலை 3 அணா

முட்டாள் பயல்: ஆழி எழுதியது. கலைபிரசுரம், புதுக்கோட்டை.

ஒழியட்டுமே கருஞ்சட்டை: கோவல் கிழார் திட்டியது. சிலப்பதிகார மன்ற வெளியீடு, கள்ளக்குறிச்சி. விலை 4 அணா

திராவிடருக்கு மதம் எது? பெரியார் ஈ. வே. ரா. சொற்பொழிவுத் திரட்டு. வெளியிட்டவர் தி. மா, இராமலிங்கம் 12 B, காவல்காரத் தெரு, தென்னூர், திருச்சி. விலை 3 அணா.

மாணவர் திருக்குறள் மணிகள்: வெளியிட்டோர்: தமிழ் இல்லம், கோம்பை.

ஒத்திக் கடன்: T. அழகர்சாமி B A., B. L, எழுதியது. S.S. ராஜன் புக் டிப்போ புதுமண்டபம், மதுரை, விலை 6 அணா.

குமரன் பாட்டு: சுப்பு ஆறுமுகம் எழுதியது. அன்பன் நிலையம், சத்திரம் புதுக்குளம், தச்சநல்லூர் P. O. விலை 2 அணா

அன்னம்: மாதமிருமுறை, ஆசிரியர் மு. சொ. கண்ணபிரான், 1/343 தங்கசாலைத் தெரு, சென்னை, விலை 1 அணா.

மாணவர் முரசு: R. M. முகமது இப்ருகிம், முரசு அலுவலகம் 86, மு. ந. சன்னதித் தெரு, பேட்டை திருநெல்வேலி மாவட்டம், விலை அரையணா

கற்பா? காமமா?: திருப்பூர் ப. கந்தசாமி திட்டியது, சண்முகபவனம், துளசிராவ் வீதி, திருப்பூர், விலை 4 அணா.

தெலுங்கு இலக்கியம்

-அறிஞர் கா. அப்பாத்துரை-

தெலுங்கு மொழி சென்னை மாகாணத்தில் ராயலசீமாவிலும் வடசர்க்காரிலும் ஐதராபாத்தில் தெலிங்காணத்திலும் பேசப்படுகிறது. தெலுங்கநாட்டின் மொத்தப் பரப்பு நூறாயிரம் சதுரக் கல்லுக்குமேற்பட்டது. இம்மொழி பேசும் மக்கள் தொகை இரண்டரைக் கோடி என்னலாம்.

தெலுங்கு என்ற சொல் தெனுகு என்பதன் திரிபு என்பர் தெலுங்கு மொழிப் புலவர். தெனுகு என்றால் தேன் போன்ற இனிமையுடையது என்று பொருள். (தமிழ்=இனிமை) கன்னடம் (கன்னல்=கரும்பு) ஆகியபிற தென்னாட்டு மொழிகளின் பெயர்ப் பொருள்கள் இதனுடன் ஒப்புடையவை.

தெலுங்கு மொழிக்கு இப்போது 'ஆந்திரம்' என்ற பெயரும் மிகுதியாக வழங்குகிறது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் தெலுங்கு நாட்டில் பேரரசு செலுத்தித் துங்கபத்திரை முதல் இமயமலை வரை ஆண்ட ஆந்திர மரபினரை ஒட்டி அப்பெயர் வழங்குகிறது. ஆந்திர அரச மரபினர் பாளி மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட வடநாட்டினர் என்று சிலர் கூறுவர். ஆயினும் பல்லவர், சோழர், கங்கருடன் அவர்கள் தொடர்புடையவராதலால் அவர்கள் தென்னாட்டு மரபினரே என்னலாம். நாம் ஆந்திர மரபுபற்றித் தற்கால வரலாற்றாராய்ச்சியால் உணர்வதன்றித் தெலுங்கிலக்கியத்திலும் மரபிலும் அவர்கள் தடமே யில்லாது போயிற்று. ஆயினும் வடமொழியாளர் ஆந்திரம் என்றபெயரால் தெலுங்கு மொழியைக் குறித்த காரணத்தால் அச்சொல் தெலுங்கு மொழிக்கு வழங்கலாயிற்று.

தெலுங்கு மொழி இலக்கிய வளமுடைய பண்பட்ட திராவிட மொழிகளுள் ஒன்று. ஆனால் ஆந்திர அரசர் கால முதற்கொண்டே அதில் பிற மொழிக்கலப்பு மிகுந்தது. ஆந்திர அரசர் புத்த சமயத்தினர். அவர்கள் சமய மொழியும் அரசியல் மொழியும் பாளியே யாகும். இப்பாளிச்சொற்கள் பெருவாரியாகத் தெலுங்கில் கலந்தன. பிற திராவிடமொழிகளிலிருந்து தெலுங்கு மிகவும் ஒதுங்கியிருந்த காரணத்தாலும் அக்காலத்தில் இலக்கண இலக்கிய வரம்பில்லா திருந்ததாலும் ஒலிகள் பெரிதும் மாறுபாடடைந்தன. பிற்காலத்தில் இவற்றுடன் வடமொழிச் சொற்கள் சிதைந்தும் (தற்பவம்) நேரிடையாகவும் (தற்சமம்) வந்து கலந்ததனால் அதில் 100-க்கு 80-சொல்வரை வடமொழி மயமாயிற்று இதனால் வடமொழிப் பற்று மிக்க

இருமொழிப் புலவர்களான பழய தெலுங்குப் பண்டிதர் அதனை ஆரிய மொழியின் விக்ருதி (சிதைவின் சிதைவு) என்பர். ஆனால் இன்றியமையா அடிப்படைச் சொற்களும் இலக்கண அமைதிகளும் பிற திராவிட மொழிகளின் தொடர்புடையன ஆதலால் அது திராவிட மொழியே என மொழிநூலார் காட்டுகின்றனர்.

தெலுங்கு மொழியைப் போலவே அதன் இலக்கியமும் பெரிதும் வடமொழிச் சார்பாய் இருந்து வந்துள்ளது. வடமொழி விருத்தமே யாப்பாகவும் வடமொழியாளர் வகுத்த இலக்கிய அமைப்பே அமைப்பாகவும் அமைந்த இம் முறைக்கு "மார்க்கி" எனப் பெயர். இவ்விலக்கியம் கி. பி. 11-ம் நூற்றாண்டிலேயே தொடங்குகிறது. இதற்கு முற்பட்ட இலக்கியம் எதுவும் கிட்டவில்லையாயினும் மரபுரையாலும் ஆராய்ச்சியாலும் அதற்கு முன்பும் இலக்கியம் இருந்திருக்க வேண்டும் என்று உய்த்துணரலாம்.

அரசர், உயர்குடியினர், புலவர் ஆகியவரிடையே வடமொழி சார்ந்த 'மார்க்கி' இலக்கியம் வளர்ந்து வந்த காலத்திலேயே, பொதுமக்களிடையே அச்சார்பற்ற இலக்கியம் ஆன 'தேசி' இலக்கியம் புலவர் ஆதரவு மிகுதியின்றித் தழைத்து வந்தது. மார்க்கி இலக்கியம் தோன்றுமுன் இருந்த இத்தேசி இலக்கியம் அழிந்துபட்டிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. தமிழ் இலக்கியத்தையும் கன்னட இலக்கியத்தையும். ஒப்பிட்டு நோக்குபவர்களுக்குப் பழங்கால இலக்கியத்திற் பெரும்பகுதி புத்தசமணச் சார்பாகவும் பின் அது சைவ அல்லது வீர சைவச் சார்பாகவும் இறுதியில் வைணவ, பிராமணிய (இந்து) மதச் சார்பாகவும் இருப்பது தெரியவரும். தமிழில் அழிந்தது போக எஞ்சியவை புத்த காலத்துக்கு முற்பட்ட படியிலிருந்தும் கன்னடத்தில் சமண காலத்திலிருந்தும் உள்ளன. தெலுங்கு நாட்டில் ஆண்ட ஆந்திரர் புத்த சமயத்தவர். முற்காலப் பல்லவர்கள் சமணர். இவர்கள் காலத்தில் புத்த சமண இலக்கியங்கள் அழிந்துபட்டன. சைவ, வீரசைவ நூல்கள் ஒரு சிலவே மிருந்துள்ளன. நன்னயர் பாரதத்தை மொழிபெயர்க்குமுன் ஜைமினி பாரதம் என்ற பெயருடன் சமணர் பாரதம் ஒன்றிருந்ததாகவும், சமண இலக்கண நூல்கள் இருந்ததாகவும் அறிகிறோம்.

இவை தவிர 9-ம் 10-ம் நூற்றாண்டுகளுக்குரிய கல்வெட்டுகளில் காணப்படும் தெலுங்குச் செய்யுள்களிலிருந்து செய்யுளும் இலக்கியமும் அவற்றுக்கு முன்பேயிருந்தனவென்று அறிகிறோம். ஆனால் இவற்றின் மொழி பிற்காலத் தெலுங்கிலிருந்து பெரிதும் வேறுபட்டிருக்கிறது. பிற்காலத் தெலுங்கைப் பண்டிதர் ஆந்திரம் என்றே கூறுகின்றனர். அதனின்றும் வேறுபட்ட இப்பழந் தெலுங்கை அவர்கள் தெலுங்'காந்திரம் என்பர். இத்தெலுங்காந்திரம் பல வகையில் தமிழ், கன்னட மொழிகளுடன் மிக நெருங்கிய ஒப்புமையுடையதாயிருக்கிறது. தமிழ், கன்னடச் சொற்களும் அமைதிகளும் மரபுகளும் மிகுதியாயிருப்துடன் பிற்காலத் தெலுங்கில்

இல்லாத தமிழ்ச்சிறப்பெழுத்தான ழகரமும் (பழந் தெலுங்கு ಲ) இதில் வழங்குகின்றன. பிற்பட்ட இலக்கிய காலத்தில் தெலுங்கில் இது 'ட' கரமாகவும் கன்னடத்தில் 'ள'கர மாகவும் திரிந்தது. மேலும் மற்றொரு தமிழ்ச் சிறப்பெழுத்தாகிய றகரம் அண்மைக் காலம் வரை அழியாதிருந்து வருவதும் புதிய எழுத்தாளர்களாலேயே இன்று கைவிடப்பட்டு வருவதும் கவனிக்கத் தக்கது.

தென்னாட்டு மொழிகளைப் பற்றிக் குறிக்கும் வடமொழி யாசிரியர்கள் முதலில் தமிழ் ஒன்றையே 'திராவிட பாஷா' என்றும், பின் தெலுங்கை ஆந்திர பாஷா என்றும், கர்நாடக ஆந்திர பாஷா என்றும் இறுதியிலேயே ஆந்திர பாஷா கர்நாடக பாஷா என்றும் குறிப்பிடுகின்றனர். எனவே தொடக்கத்தில் தமிழ், கன்னடம், தெலுங்கு, ஆகிய மூன்றும் ஒரே மொழியாய் இயங்கின வென்றும், தமிழிலிருந்து பிரிந்த பின் கர்நாடகமும் ஆந்திரமும் ஒரே மொழியாயியங்கின என்றும் பின் அவை இரண்டாகப் பிரிந்தன என்றும் உணரலாம். இதற்கேற்ப இரு மொழிகளும் முதலில் ஒரு எழுத்து வடிவுடையவையாயிருந்து நன்னயர் காலத்தையொட்டியே தெலுங்கெழுத்து இன்றையவடிவுடன் ஒரு சிறிதளவு மாறுதலடைந்தது என்றறிகிறோம். தொடக்கக் காலக் கன்னட இலக்கியம் தமிழ்ச் சொல் கலந்து காணப்படுவது போல், தொடக்கக் காலத் தெலுங்கு நூல்களில் சிலவேனும தமிழ் கன்னடச் சொல் கலந்து காணப்படுகின்றன.

இலக்கிய காலத் தெலுங்கின் வரலாற்றை நான்கு கூறுகளாக வகுக்கலாம். அவை புராண அல்லது மொழி பெயர்ப்புக் காலம் (11-15 நூற்றாண்டுகள்) செயற்கைக் காப்பிய அல்லது பிரபந்த காலம் (16-17 நூற்றாண்டுகள்) நலிவுக் காலம் (18-19 நூற்றாண்டுகள்) தற்காலம் அல்லது மறுமலர்ச்சிக்காலம் (19 - நூற்றாண்டு பிற்பகுதி, 20-ம் நூற்றாண்டு) என்பவை.

புராண (மொழிபெயர்ப்புக்) காலம் (11—15 நூற்றாண்டு)

தெலுங்கிலக்கியத்தில் காலத்தாலும் சிறப்பாலும் முதன்மையுடையவர்கள் பாரதத்தை மொழி பெயர்த்துப் பாடிய நன்னயன், திக்கணன், எறப்ரகதன் ஆகியவர்களே. இவர்களைக் கவிஞர் மூவர் (கவித்ரயம்) என வழங்குவதும் நூலாசிரியர்கள் நூன்முகத்தில் வழிபடுவதும் மரபு. சோழ அரசருடன் நெருங்கிய மண உறவு கொண்ட சாளுக்கிய மரபினனான ராஜ ராஜ நரேந்திரன் தமிழிலும் கன்னடத்திலும் பாரதம் படிக்கக் கேட்டு அதனைத் தெலுங்கிலும் மொழி பெயர்க்கும்படி நன்னயரை வேண்டியதாகக் கூறப்படுகிறது. பாரதத்தின் 18 பருவங்களில் நன்னயர் முதல் மூன்று பருவங்களை மட்டுமே மொழி பெயர்த்தார். அதற்கு இரண்டு நூற்றாண்டுகட்குப் பின் வந்த திக்கணர் நன்னயர் விட்ட இடத்திலிருந்து தொடங்காமல் விராட பருவத்திலிருந்து தொடங்கிப் பத்துப் பருவங்களளவும் மொழிபெயர்த்தார். அடுத்த நூற்றாண்டில் எறப்ரகதர் நன்னயரால் விடப்பட்ட

ஆரணிய பருவத்தை நிறைவு படுத்தித் திக்கணர்விட்டபகுதி யையும் பாடி முடித்தார்.

நன்னயர் பாரதத்தை முழுவதும் முடிக்காதது ஜைமினி பாரத ஆசிரியர் சாபத்தினுல் என்று சிலர் கூறுகின்றனர். வேறு சிலர் பாரத மொழி பெயர்ப்பவர், சிறப்பாக ஆரணிய பருவம் மொழி பெயர்ப்பவர் பைத்தியம் பிடித்துப்போவார் என்று மக்கள் நம்பினர் என்று கூறுகின்றனர். அதற்கேற்ப நன்னயர் ஆரணிய பருவம் தொடங்கியதும் பைத்தியம் கொண்டார் என்றும் அதனுல்தான் இரு நூறு ஆணடுகள மொழி பெயர்க்க எவரும் முன் வர வில்லை என்றும, அதன்பின் மொழிபெயர்க்க முற்பட்ட திக்கணரும் ஆரணிய பருவத்தைத் தீண்ட அஞ்சி மேற் சென்றனர் என்றும் கூறுகின்றனர். தவிர எறப்ரகதர் ஆரணிய பருவத்தைத் தம் பெயரால் மொழிபெயர்க்கத் துணியாமல் நன்னயர்பெயரால் அவரை ஆதரித்த அரசனேயே துதி பாடி அவர் நடையிலேயே எழுதினுர். திக்கணர் பாதியில் விட்ட பகுதியை இதுபோல் அவர் திக்கணர் நடையிலும் இறுதிப்படியில் தனக்கே உரிய நடையிலும் இயற்றினர் என்று தெரிகிறது. இதிகாச மொழி பெயர்ப்பில் தமிழ், மலையாளம், கன்னடம் முதலிய எல்லா மொழிகளிலுமே வடமொழி யாளர் எதிர்ப்பு இருந்ததாக அறிகிருேம்.

நன்னயர் வடமொழியிற் புலவர். வடமொழி மரபைப் பின் பற்றி எழுதியதுடனன்றி வட மொழிச் சொற்களையும் ஏராள மாக வழங்கினுர். திக்கணர் நடையில் நன்னயரினும வட மொழிச் சொற்கள் குறைவே. ஆயினும் தெலுங்கு மொழியின் போக்கில் வடமொழி பெருகிய தனுல் நன்னயர் நடையினும் அது கடுமையாகக் கருதப்படு கிறது. நன்னயரின் நடை இனி மையும் எளிமையும் பொருள் நயமும் உடையதாகக் கருதப் படுகிறது. இத்தகைய நடை யையே வடமொழியாளர் திராக்ஷாபாகம் (முந்திரிப்பழம் போல் எளிதில் உடைத்துச் சுவைக்கப் பெறுவது) என்பர். வடமொழியிலிருந்து மொழி பெயர்க்க அவருக்கு நாராயண பட்டர் எனபவர் உதவினர் என்பர்.

திக்கணர் நடை நன்னயர் நடையினும் செறிவும் சுருக்கமு முடையது. கதையுறுப்பினர் பண்டுபாவியங்கள் தீட்டுவதில் இவர் ஒப்புயர்வற்றவர். கதை உறுப்பினரும் பொருள்களும் கூட அவர் மாயக் கவிதையால் உயிர்பெற்றனவபோல இயங்கு கின்றன. அவர் விராடபருவத் திலேயே தம் முழுத்திறத்தை யும் காட்டினுர்.

எறப்ரகதர் தெலுங்கு மொழியின் ஒப்பற்ற கலைஞன் என்பதை அவர் மற்ற இருவர் நடையையும் திறம்படப் பின் பற்றிப் பின் தமக்கே உரிய மாறுபட்ட நடையிலும் எழுதிய தொன்றே காட்டும். இவரது சொந்த நடை நன்னயர் திக்க ணர் ஆகிய இருவர் நடையி னும் அழுத்தமும் செறிவும் உடையது. ஆனுல் இதில் பொருளாழமும் மிகுதி. இத் தகைய நடை கதலிபாகம் (வாழைப்பழம் போல் சிறிது முயற்சியால் பெற்றுச் சுவை பயப்பது) எனப்படும்.

பாரத மொழிபெயர்ப்பே யன்றித் திக்கணரால் நிர்வ ஞேத்தர ராமாயணமும் எறப்ரகதரால் ஹரி வம்சமும் எழுதப்பட்டன. பாரதம் உரை யிடையிட்ட பாட்டு(சம்பூ) நடை யில் எழுதப்பட்டது. ஆனால் மற்ற இரு நூல்களும் உரை நடையின்றி முழுவதும் பாட் டாகவே அமைந்தவை.

மொழிபெயர்ப்புக்காலத்தின் முற்பகுதியில் நன்னயர், திக் கணர் ஆகியவருக்கடுத்தபடி யான கவிஞர் பல்குரிச்சி சோம நாதர் ஆவர். இவர் பண்டி தாராத்ய சரித்திரம் பசவ புராணம் என்ற காவியங் களும் அனுபவசாரம் என்ற வேதாந்த நூலும் எழுதினர். பண்டிதாராத்ய சரித்திரம் தெலுங்கிலேயே பிற புலவர் களால் மீட்டும் காவியமெழு தப்படுவதற்கான முதனூலா யிருந்தது. இக்காலத்திய தென்று சிலராலும் நன்னய ருக்கு முற்பட்டு 10-ம் நூற் ருண்டினதென்று சிலராலும் கொள்ளப்படும் மற்றொரு நூல் நன்னசொடு இயற்றிய குமார சம்பவம் ஆகும். இது அண்மை யிலேயே வெளிப்படுத்தப் பட் டது. இதன் ஆசிரியர் சோழப் பேரரசர் கீழிருந்து ஆண்ட சிற்றரசர்களாகிய ஆந்திர தோடரில் ஒருவர் இவர் தாம் காவேரிக் கரையிலுள்ள உறை யூரில் ஆண்டதாகப் பெருமை யுடன் குறிக்கிருர். இந்நூல் இன்று தெலுங்கிலக்கிய அறிஞர்களால் உச்சிமேற் கொள்ளப்படுவதொன்று. தமிழ் கன்னடச் சொற்களும் நடையும் இதில்மலிவு. இது மொழியின் முற்பட்ட நிலையைக் குறிக்குமென்று சிலரும் பிற மொழிகளைக் கூடக் குறிக்கு மென்று பிறரும் கொள்வர். முதலாம் பிரதாப ருத்திரன், பெத்தணன் என்ற ஆந்திர சோடர் இருவரும் தாமே அரச ராயிருந்து அரசியல் நெறி பற்றி 'நீதிசாரம்' என்ற பெய ரால் நூல்கள் இயற்றினர். வடமொழிக் கணித நூல்களும் இக்காலத்தில் மொழிபெயர்க் கப்பட்டன.

மொழி பெயர்ப்புக் காலத் தின் பிற்பகுதியில் கவிஞர் மூவருடன் வைத்தெண்ணத் தக்க ஸ்ரீநாதர், போதனர் ஆகிய இருவரும் வாழ்ந்தனர். முன்னவரது நைடதம் வட மொழி, தமிழ் நைடதங்கள் போலவே 'புலவர்க்கௌடத' மாயுள்ளன. போதனரின் பாக வதம் தெலுங்கின் ஒப்புயர் வற்ற பக்திக் காவியம். அவர் வடமொழிச் சொற்களையும் நீண்ட தொகைச் சொற்களை யும் யாவரினும் மிகுதியாக வழங்கினுலும் ஓசையினிமை உணர்ச்சி காரணமாக மக்க ளிடையே பெருத்த செல்வாக் குப் பெற்றுள்ளார்.

மக்கட் சார்பான தேசிய இலக்கியங்களுள் கோனபுத்த ராஜுவின் இராமாயணமும் 'பல்நாட்டி வீர சரித்திரம்' என்ற நாட்டுப்பாடல் நூலுமே யாகும். கோனபுத்த ராஜு ராயலசீமாவில் ஆண்ட பிர தாப ருத்திரன் என்ற அரச னின் படைத் தலைவர். இந் நூல் துவிபதி என்ற இருசீர் யாப்பில் நாட்டு மக்கள் பாடும் படி அமைந்துள்ளது. இதில் தென்னிந்தியக் கதைகள் பல

வும் தென் இந்திய வாழ்க்கை முறையும் மனக் கிளர்ச்சியுடன் தீட்டப்பட்டுள்ளன. தெலுங்கு மக்களிடையே பொதுவாகவும் ராயலசிமா மக்களிடையே சிறப்பாகவும் குடும்பப் பாடலாக எங்கும் பரவிய நூல்களுள் முதன்மையானது இதுவே. இவ்வகைப் பாடலில் இந்நூலுடன் போட்டியிடுபவை பல்நாட்டி வீர சரித்திரமும் வேமனர் பாடல்களுமே. பல்நாட்டி வீரசரித்திரம் தெலுங்கநாட்டு ரெட்டி அரசர்கள் வீரச்செயல்கள் பற்றிய நாட்டுப்பாடல். விதிநாடகம் என்ற நாடக நூலையும் ஸ்ரீராதரே இயற்றினர் என்பவரும் உண்டு.

வீர கவி என்ற கவிஞர் இக்காலத்தில் புகழ்பெற்ற கவிஞராயிருந்ததாகக் காணப்படுகிறது. ஆனால் அவர் இயற்றிய நூல்கள் எவை என்று உறுதியாகக் கூறமுடியவில்லை. சதகண்ட ராமாயணம், சிவபுராணம் ஆகியவை அவர் இயற்றியவை எனக் கூறப்படுகிறது.

தெலுங்கு நாட்டுக் கவிஞர்களுக்குள்ளே முதன்மை வாய்ந்த மணிகளுள் ஒருவரும் மக்களிடையே மிகப் பெரு வழக்காயுள்ளவரும் வேமனரேயாவர். இவர் பிறப்பிடம் காலம் எதுவுமே உறுதியிட்டுக் கூற முடியவில்லை. ஆயினும் ராயலசீமாவிலுள்ள கொண்ட நாட்டில் இவர் பிறந்தனர் என்றும் 15-ம் நூற்றுண்டில் வாழ்ந்தனர் என்றும் ஊகிக்கப்படுகிறது. இவர் ஒப்பற்ற அனுபவ ஞானி. இவர் இயற்றிய வேமன சதகத்தைப் போல் பண்டித பாமரர் ஆகிய அனைவர் நாவிலும் சிறப்புகளுடன் வாழும் நூல் வேறு காண்பதரிது.

பிறநாட்டு உலக அறிஞர்களான வள்ளுவர், கன்புசியஸ் ஆகியவர்கள் நல்லுரைகளுடன் இந்நூல் உரைகள் ஒப்பிடக்கூடியவை.

'தேசி' நெறியைச் சேர்ந்த எண்ணற்ற பாடல்கள் தெலுங்கு மொழியிலுள்ளன. இவற்றின் ஆசிரியர், காலம் எதுவும் வரையறுக்கக்கூடவில்லை. இவை எல்லாக் காலங்களிலும் மக்களிடையேயுள்ள இயற்கைக் கவிதையுணர்ச்சியால் எழுந்தனவென்றே கொள்ளல்தகும். இவை ஊர்ப்புற நாடகங்கள் (யக்ஷகானம்) நாட்டு பாடல்கள் (பாட்டலு) ஆகிய இருதிறத்தன. பின் கூறப்பட்டதன் சார்பில் தாலாட்டுப் பாட்டு (லாலிபாட்டலு) காதற்பாட்டு (ஜாவளிலு) தொழிலாளர் பாட்டு (கூலிப்பாட்டலு) களியாட்டப்பாட்டு (ஆட்டபாட்டலு) பழமொழிகள் (சமிதெலு) கதைப்பாட்டுக்கள் (கதலு) ஆகிய பலவகைகள் உண்டு.

'தேசி' கவிதையின் யாழ்முறை வடமொழிச்சார்பற்றது. இது தாய்மொழிக்கு உதவிய திராவிடப் பாமுறையாகும். மோனை (யதி)யும் எதுகையும் (ப்ராசம்) இதிலே தான் இடம் பெறும். இசைப்பாட்டு, துவிபதி (இருசீர்ப்பா) சதுஷபதி(நாலடி) ஆகியவை இதில் உட்பட்டவை. நன்னயர் கூடத் தருவாஜம், அக்கரம், சிசம ஆகிய நாட்டு மெட்டுக்களை வழங்கினர்.

[அடுத்த இதழில் முடியும்]

சிலப்பதிகாரக் காட்சிகள்

விசு. திருநாவுக்கரசு

11 ஆயர் பாடியில்

அந்தி புகுந்த நேரத்திலே ஆயர்பாடிக்கு வந்த கண்ணகியும் கோவலனும் மாதரியின் செம்மண் பூசிய சிறுமனை ஒன்றிலே குடிபுகுந்தனர். வேலி சூழ்ந்த அப்புது மனையிலே வெப்பந் தணிக்கவல்ல காவணம் போடப்பட்டிருந்தது.

இயற்கை வாழ்வொடு எளிய வாழ்க்கை மேற்கொண்ட மாதரி, கண்ணகி கோவலனை உபசரித்தாள். கவுந்தி அடிகள் கூறியவாறு கண்ணகிக்கு ஆயர் பெண்டிருடன் கூடிப் புதுப் புனலாட்டிப் புதுமலர் சூட்டினாள். கண்ணகியின் இயற்கை அழகின் முன்னே மதுரை நகரத்து மகளிரின் செயற்கை அழகு எல்லாம் நாணிக் கோணி மறைவதை எண்ணினாள். கண்ணகிக்கு, அருமை மகள் ஐயை என்பாளை அறிமுகமாக்குகிறாள். இட்ட பணி செய்ய இவளையே பணிப் பெண்ணாக அன்புரிமை பற்றி அமர்த்துகிறாள். கடுமையான வழி நடந்த கண்ணகி - கோவலனை வழித் துன்பமறியாது அழைத்து வந்த கவுந்தியோ பின்னும் தம் கடமையைக் குற்றமறச் செய்தவராகிறார். அதை மாதரி வாக்கால் நாம் நன்கறிகிறோம். 'மாதவத் தாட்டி வழித்துயர் நீக்கி, ஏதமில்லா இடந்தலைப் படுத்தினள்' என்பதே அவ்வாக்காகும். இதனால், எத்தகைய துன்பத்தையும் நினைத்து கோவலன் வருந்த வேண்டியதில்லை என்பதைத் தெளிவாய்ப் புலப்படுத்துகிறாள்.

பூவல் ஊட்டிய
புனைமாண் பந்தர்க்
காவற் சிற்றில்
கடிமனைப் படுத்துச்
செறிவளை யாய்ச்சியர்
சிலருடன் கூடி
நறுமலர்க் கோதையை
நாணீர் ஆட்டிக்
கூடல் மகளிர்
கோலம் கொள்ளும்
ஆடகப் பைம்பூண்
அருவிலை அழிப்பச்
செய்யாக் கோலமொடு
வந்தீர்க்கு, 'என்மகள்
ஐயை காணீர்'
அடித்தொழிலாட்டி

இவ்வாறு பேசுகிறாள் மாதரி. மதுரை நகர் மகளிரொடு கண்ணகியின் அழகை ஒப்பிட்டு அவளது இயற்கை அழகு கண்டு வியந்து பேசுகிறாள். நாகரிகத்தால் சிறந்த மதுரை மகளிரை ஒப்பிட்டது தானறிந்த அளவில் அது தனிச் சிறப்புடையதாகிறது.

ஆயர்பாடியில் சிறுமனை ஒன்றிலே கண்ணகியும் கோவலனும் தங்கினர் என்று கூறு

வதைப் பார்க்கிலும் 'செம்மண் பூசிய சிறுமனை' என்ற ஒன்றால் வாசகர்கள் உள்ளத்தில் அச் சிறு குடிலை ஆசிரியர் எவ்வளவு எளிதாய்க் காணவைத்து உரு வாக்குகிறார். நம் நினைவில் அச் சிறு குடில் முற்றிலும் நிற்கு மாறு முன்னுள்ள காவணத் தைத் தாம் மறவாது குறிப் பது, சிறிய அமைப்பொன்றை யும் அவர் மறந்ததில்லை என் பதைக் காட்டுகிறது.

பொழுது சாய்ந்து வருவதை அறிந்த மாதரி 'இரவுப் பொழுதிலே இவர்கள் உணவு உண்ண மாட்டார்களே' என் பதை அறிந்தாள். பக்கத்தே நின்ற ஆய்ச்சியர்களை ஏவி, உணவிற்கு வேண்டிய காய் கறிகளையும், புதிய மண் பாண்டங்களையும் கொண்டு வருமாறு பணித்தாள்.

கோளிற் பாகல்
கொழுங் கனித்திரள்காய்
வாள்வரிக் கொடுங்காய்
மாதுளம் பசுங்காய்
மாவின் கனியொடு
வாழைத் தீங்கனி
சாலி அரிசி
தீம்பால் பயனொடு
கோல்வளை மாதே
கொள்கெனக் கொடுப்ப

இவைகளே ஆய்ச்சியர் கொண்டுவந்து கொடுத்த பொருள்கள். கோளிற் பாகல் கொழுங்கனித் திரள் காய் என்பது பலாக்காய். அதற்குத் தான் எத்தனை அடைமொழி பாருங்கள். 'பூவாது காய்க்கும் மரமுமுள' என்று கூறுவர். அப்படிப் பூவாது காய்க்கும் மரமே பலாமரம். இது சொல் லாமலேயே அள்ளி வழங்கும் வள்ளல்களைப் போன்றது. பலாவைப் பக்குவமாகக் கறி செய்தால் சுவையில் அதற்கு இணை ஏது? இளம் பிஞ்சு கறிக்குதவாது என்பதை அடைமொழியால் உணர வைத்து முற்றி விளைந்த வெள் ளரிக்காய் கூறப்படுகிறது. கொம்மட்டிமாதுளை இவை கறி செய்யக் கொண்டு வந்த காய் கள். இனிக் காயொடு கனியும் கொண்டுவந்தனர். அவை மாங்கனியும் வாழைத் தீங்கனி யுமாகும். காய்கறி அல்லாது தீம்பாலும் நறுநெய்யும் இருந் தன. சோறு சமைக்கச் சாலி அரிசியும் வந்தது, அரிய பொருள்கள். இவைகளைப் பெற்ற கண்ணகி சமையலுக்கு ஆயத்தமாகிறாள். மெல்லிய விரல்கள் சிவக்குமாறு அரி மணையில் வைத்துக் கறிகளை அரிகிறாள். மலர் முகத்தில் வியர்வை முத்துக்கள் அரும் பின. செவ்வரிபடர்ந்த கண்கள் சிவந்துபோயின. அடுக்களைக்கு வந்தாள், புகைபடிந்த இடங் கள் அவளை முகம் மாறிச் செல்லத் தூண்டின. ஐயை ஓடோடி வந்து வைக்கோலைப பற்றவைத்து நெருப்பை மூட்டினாள்.

மெல்விரல் சிவப்பப்
பல்வேறு பசுங்காய்
கொடுவாய்க் குயத்து
விடுவாய் செய்யத்
திருமுகம் வியர்த்தது
செங்கண் சேந்தன
கரிபுற அட்டில்
கண்டனள் பெயர
வையெரி மூட்டிய
ஐயை தன்னொடு

தன்கைத்திறமை தோன்றக் கண்ணகி காதலனுக்கு அடிசில் ஆக்கினாள்.

கண்ணகிக்குச் சமையல் தொழில் மிகவும் புதியது என் பது இங்கே நயமாகக் கூறப் படுகிறது. காய்கறிகளை அரிந்த

அவளது மெல்விரல்லிகள் சிவந்தன என்றார். இது முன் அநுபவமின்மையைக் காட்டுகிறது. அடுத்து அதனால் முகம் வியர்த்தது என்றார். மேலும் அவளுக்குப் பயிற்சியில்லை என்பதாயிற்று. கைவிரல் சிவந்தன என்றவர் கண்ணும் சிவந்தன என்கிறார். அது எப்படி? பசுங்காயை அரிந்ததால் கண் சிவக்குமா? இல்லை. கரிபடிந்த அடுக்களையை அவள் சென்று கண்டாளல்லவா? கண்ட கண்ணும் சிவந்தது. அடுக்களையை அவள் பார்த்ததுமில்லை என்பதை இதனிலும் சிறக்க எவ்வாறு பேசமுடியும்? கண்ணகியின் எண்ணத்தைக் கணமொன்றில் கண்டுகொண்ட ஐயை உதவிக்கு ஓடோடி வருகிறாள். ஐயையின் உதவியோடு கண்ணகி சமையலை முடித்தாள். பலாக்காய், வெள்ளரிக்காய், கொம்மட்டிமாதுளங்காய் இவைகளை அரிந்து, ஒரு பொறியல், ஒரு கூட்டு, ஒரு பச்சடி ஆக்கினாள். இது நம்முடைய யூகமல்ல. கொம்மட்டி மாதுளங்காய் புளித்த கறி ஆக்குதற்கே உரியது. எனவே அது பச்சடி ஆகிறது. வெள்ளரிக்காய் கூட்டு செய்யும் பக்குவமுடையது. பலாக்காய் கூட்டும் செய்யலாம். பொறிக்கறியும் செய்யலாம். வெள்ளரிக்காய் கூட்டாக ஆக்கப்பட்டதால் பலாக்காய் பொறியலாகத்தான் செய்திருக்கவேண்டும் என்பது பெறப்படும்.

நாம் உணவை மூன்று பகுதியாக்கி உண்ணுகிறோம். நெய்ச்சோறு; குழம்புச் சோறு; மோர்ச் சோறு என்பன. கூட்டுக் கறியை நெய்ச் சோற்றுடனும், பொறியலைக் குழம்புச் சோற்றுடனும், பச்சடியை மோர்ச் சோற்றுடனும் உண்ணத்தக்கவாறு கண்ணகி பக்குவம் செய்த அருமைப்பாட்டை எண்ணுங்கள். உணவின் சுவை வேறுபாடுகளுக்கு ஏற்பக் கறிகளின் சுவையும் பொருந்திக் கலக்கவேண்டும். அதனால் பிடி உணவு மிகுதியாக உண்ண விருப்பமுண்டாகும். கணவனை உவப்புடன் உண்ணவைப்பதில் பழந்தமிழ் நாட்டு மகளிர் சிறந்தவராவர். கண்ணகிபால் அவ்வியல் பிருத்தல் அதிசயமொன்றுமில்லையல்லவா?

இனி, கண்ணகி பனையோலையில் வனப்புடன் பின்னப்பட்ட தடுக்கொன்றிலே கணவனை அழைத்து அமரச் செய்தாள். தண்ணிய மலர்க்கையால் தரையினை மெழுகினாள். அதன் மீது குமரி வாழையிலையை விரித்தாள், உணவு பரிமாறினாள். 'உண்க, உண்க' என்று பக்கமிருந்து பரிவுடன் கணவனை உபசரித்தாள்.

தாலப் புல்லின்
வால்வெண் தோட்டுக்
கைவன் மகடுஉக்
கவின்பெறப் புனைந்த
செய்வினைத் தவிசில்
செல்வன் இருந்தபின்
கடிமலர் அங்கையில்
காதலன் அடிநீர்
சுடுமண் மண்டையில்
தொழுதனள் மாற்றி
மண்ணக மடந்தையை
மயக்கொழிப் பனள்போல்
தண்ணீர் தெளித்துத்
தன்கையால் தடவிக்
குமரி வாழையின்
குருத்தகம் விரித்து
அமுதம் உண்க
அடிகள் ஈங்கு

என்ற சொல்லிலும் செயலிலும் பிரிக்கமுடியாத பேரன்பை நாம் காணுகிறோம். பாத்திரமொன்றால் தண்ணீரை எடுத்துக் கண்ணகி தரையைமெழுகுகிறாள். அவள் முன்பெல்லாம் பொன்னிலும் வெள்ளியிலும் ஆக்கிய கலன்களை உபயோகப்படுத்தியவள். மட்கலம் எடுக்க நேர்ந்ததை ஆசிரியர் வருந்திய உணர்வில் பிறந்த சொற்களால் பேசியிருக்கிறார். நிலத்திலே நீரைத் தெளித்து மெழுகுகிறாள் கண்ணகி. அச்செயலில் நாம் அனுதாபம் காட்டும் அளவுக்கு ஏதும் காணவில்லையல்லவா? ஆனால் நிலமகளின் மயக்கத்தை நீக்குபவள் போல நீர் தெளித்து நிலத்தை மெழுகினாள் என்ற போது எங்கோ மறைந்து கிடந்த நமது அனுதாபமும் கவியின் சோக உணர்வுடன் வந்து கலந்துவிடுகிறது. கண்ணகியின் காதலன் மதுரையிலே மன்னிக்கமுடியாத கொடுமைக்கு, கொலைக்கு ஆளாவதை நிலமகள் நினைத்தபோது மன நடுக்கம் ஏற்படுகிறது. அதனால் அவள் மயங்க, கண்ணகி மயக்கம் தெளிவிப்பதாய் அக்காட்சியைக் கவி காணுவது எவ்வளவு சோகமாய் அமைந்திருக்கிறது.

இந்தச் சோகக் காட்சியைக் கவிஞன் தான் தன் கற்பனையில் காணுகிறான். ஆனால் இந்தக் காட்சியைக் கண்ணுக்கு நேராகச் சாளரத்தின் வழியே காண்பவரும் உண்டு. அவர்களே மாதரியும் ஐயையும் ஆவர். கவிஞனது கற்பனையிலே சோகமாய்ப்பட்ட காட்சி இவர்கள் கண்ணிலே இன்பச் சித்திரமாய்ப் படுகிறது. என்ன அற்புதம்! இதோ பாருங்கள்:

ஆயர் பாடியின்
அசோதை பெற்றெடுத்த
பூவைப் புதுமலர்
வண்ணன் கொல்லோ
நல்லமு துண்ணும்
நம்பி ஈங்கு

'அன்று ஆயர்பாடியிலே அமுதுண்ட கண்ணனோ இங்கு உணவுண்ணும் நம்பி' (கோவலன்) என்று பரவசப்படுகிறாள் மாதரி.

பல்வளைத் தோளியும்
பண்டுநம் குலத்துத்
தொழுனை யாற்றினுள்
தூமணி வண்ணனை
விழுமந் தீர்த்த
விளக்கு கொல்லோ!

'அன்று காளிந்தி யாற்றிலே கண்ணனைத் துயர்தீர்த்து மகிழ்வித்த இராதை தானோ இக்கண்ணகி!' என்று வியப்படைகிறாள் ஐயை. இவர்கள் காணும் இக்கண்கொள்ளாக் காட்சியிலே இராதை கண்ணனுக்குத் துயர் துடைத்ததைப் போல, கண்ணகியால் கோவலனுக்கு வரும் துன்பத்தை மாற்றமுடியவில்லையே: கவிஞன் கண்ட கற்பனைக் காட்சி தான் நிறைவேறப் போகிறது.

மாதரி இவர்கள் இருவரையும் வைத்து உறவு பாராட்டுகிறாள். கோவலனை மகனாகவும் கண்ணகியை மருமகளாகவும் எண்ணுகிறாள். ஆமாம்! தன் மகள் ஐயை என்பாளைக் கண்ணகிக்கு நாத்தனாராக்கி மகிழ்

கிருள். மேலான உள்ளத்தின் எடுத்துக் காட்டாய் மாதரி இங்கே உலவுகிருள். அவளது அரிய பண்பனைத்தும் ஐயையிடமும் அரும்புகின்றன.

இனி, கண்ணகியையும் கோவலனையும் காண்போம். உண்டு எழுந்த கோவலனுக்குக் கண்ணகி வெற்றிலை மடித்துப் பரிவுடன் வழங்கினுள். வழங்கிய கண்ணகியைக் கோவலன் அருகழைத்தான். பொங்கிவரும் அன்பை இனி மறைக்க முடியாத நிலையிலே வெளியிட்டு உருக்கமாய்ப் பேசுகின்ருன்.

கல்லதர் அத்தம்
 கடக்கயாவதும்
வல்லுந கொல்லோ
 மடந்தை மெல்லடியென

வெம்முனை யருஞ்சுரம்
 போந்ததற் கிரங்கி
யெம்முது குரவர்
 என்னுற்றனர் கொல்
மாயங் கொல்லோ
 வல்வினை கொல்லோ
யானுளங் கலங்கி
 யாவதும் அறியேன்

கல்லிலும் கானலிலும் துயர் தரும் காட்டிலும் கண்ணகியின் மெல்லிய மலரடிகள் எவ்வாறு நடந்து வழிகடந்தனவோ என எண்ணி அலமறும் தாய் தந்தையர்களைக் கோவலன் நினைத்துப் பார்க்கிருன். புலம்புகிருன். 'இது மாயமோ? முன் செய்த தீவினையோ' என்று காரணமறிய மாட்டாது கலங்குகிருன். சிறிது நேரம் நிசப்தமாய்க் கழிகிறது. கோவலன் அறிவு தெளிவடைந்து வருகிறது. சிறிது சிறிதாகக் காரணமும் புலனுகிறது.

வறுமொழி யாளரொடு
 வம்பப் பரத்தரொடு
குறுமொழிக் கோட்டி
 நெடுநகை புக்குப்
பொச்சாப் புண்டு
 பொருளுரை யாளர்
நச்சுக் கொன்றேற்கு
 நன்னெறி யுண்டோ

'பயனில் சொல் பேசுவோர்; பரத்தையர், இழிந்த இயல்பினர்; என்போர் கூட்டத்தில் உழன்று உயிரினும் உயர்ந்த ஒழுக்கத்தை இழந்த எனக்கு நன்னெறியும் உண்டோ' என்று சொல்லித்தேம்புகிருன்.

இரு முது குரவர்
ஏவலும் பிழைத்தேன்
சிறுமுதுக் குறைவிக்குச்
சிறுமையும் செய்தேன்
வழுவெனும் பாரேன்
மாநகர் மருங்கிண்டு
எழுகென எழுந்தாய்
என் செய்தனே

'முதிர்ந்த பருவத்தில் தாய் தந்தையர் அருகிருந்து உதவவும் தவறினேன். சிறு பருவத்து நினக்கும் தீமை செய்தேன். நகர் விட்டு நாடுவருதல் தவறெனவும் எண்ணாது வருக நீ என்றவுடன் வந்தாய்! எத்தகைய அரிய காரியம் செய்தாய்' என்று பேசித் தன்னைத் தானே ஆராய்ந்து தன்னைத் தானே பழித்துக்கொள்கிறான். கண்ணகியின் மேலான பண்புகள் மேலோங்கி நிற்பதை வாய் விட்டுப் புகழுகிறான்.

இதையெல்லாம் பொறுமையுடன் கேட்டு வந்த கண்ணகி, கோவலனுடன் இதற்கு முன்பு இவ்வாறு பேசியதில்லையே என்று நாம் நினைக்குமாறு உள்ளத்திலே குமுறிக் கொண்டிருந்த எண்ணங்களைக் கூறுகிறாள். . வருத்தங்களைப் புலப்படுத்துகிறாள்.

கணவனுடன் இல்லறமிருந்து செய்ய வேண்டிய அறங்களைச் செய்யக்கொடுத்து வைக்கவில்லையே என்பது அவளுடைய முதல் ஏக்கம். வந்த விருந்தினர்களை வரவேற்க, அருகிருந்து உபசரிக்கக் கணவரில்லையே என்பதுமாற்ற முடியாத பெருவருத்தம். தன் வாழ்வு முழுதுமே சூனியமாக மாறிவிடாமல் அப்போதைக் கப்போது வந்து ஆறுதல் கூறிய மாமனும் மாமியும்

அருள்சுரந்த பெருந்தன்மை. அப்போதெல்லாம் தான் வருந்துவதாய் நினைத்து அவர்கள் வருந்துதல்கூடாதே என்பதற்காக முகத்தளவில் பிறந்த தன் புன்முறுவலைக் கண்டு மேலும் அவர்கள் வருந்திய நிலை. இவைகளை எல்லாம் எடுத்துப் பேசும் கண்ணகி, 'போற்ரு ஒழுக்கம் புரிந்தீர்' என்ருரு சுடுசொல்லோடு தன் பேச்சுக்கு ஒரு முடிவு காணுகிறாள். இதற்குப் பிறகு உள்ளத்திலே பெருகி வந்த பெருஞ் சுமை தன்னையறியாது நழுவியதுபோல ஒரு நிலை அடைகிறாள்.

இதைக் கேட்ட கோவலன் மனமுடைந்து பேசுகிறான்.

என்னொடு போந்திங்கு
என் துயர் களைந்த
பொன்னே கொடியே
புனைபூங் கோதாய்
நாணின் பாவாய்
நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே
பொற்பின் செல்வி

என்று பலவாறு பாராட்டுகிறான், இங்கே கவி கோவலனுக்குக் கண்ணீர் வடிக்கிறார். கண்ணகியை விட்டுக் கோவலன் பிரிகிறான். அவன் என்ன செய்தும் ததும்பும் கண்ணீரை மறைக்கமுடியவில்லை. ஆம். கண்ணும் கண்ணீருமாய் வழி நடக்கிறான். ஒரே சோகம்.

கலை யுலகம்

இன்று தமிழ்நாட்டில் நாடகக் கலையின் முன்னேற்றத்திற்குச் சலியாது உழைப்பவர்கள் டி. கே. எஸ். சகோதரர்கள் தாம்! வேண்டுமானால் சென்னை ஒற்றைவாடைத் தியேட்டரில் தினசரி நடைபெறும் "மனிதன்" நாடகத்தைச் சென்று பாருங்கள். நாடகக் கலை முன்னேற்றத்திற்காக டி. கே. எஸ். சகோதரர்கள் எவ்வளவு தூரம் பாடுபட்டு வருகிறார்களென்பது தெற்றெனவிளங்கும்!

மனிதன்

நாடக விமரிசனம்

'மனுஷ்யன்' என்னும் மலையாள நாடகக் கதையைத் தமிழ்ப் படுத்தியிருக்கின்றார்கள் திரு. ஆதிமூலமும், சோமசுந்தரமும். அதை மிகத் திறமையுடன் கலையழகு ததும்ப நடித்து தமிழ்மக்களின் பாராட்டுதலைப் பெறுகின்றார்கள் டி. கே. எஸ். சகோதரர்கள்.

கதை ஒரு டாக்டரைப் பற்றியது! சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் வந்து, கடைசி வரையில் விறுவிறுப்புடன் செல்கிறது நாடகம்.

டாக்டர் சுகுமாரன் அரசாங்க ஆதரவு பெற்று மேல்படிப்புக்காக, தன் இளமனைவி சாவித்ரியைப் பிரிந்து ஐரோப்பா செல்கிறான். படிப்பை முடித்துக் கொண்டு, சென்னை திரும்பியதும், டில்லியிலிருக்கும் அகதிகள் முகாமிற்குச்சென்று சிகிச்சை செய்யும்படி சர்க்காரிடமிருந்து உத்தரவு கிடைக்கிறது. கடமையே பெரிதெனக் கருதிய சுகுமாரன் தன் இளமனைவி சாவித்திரியையும் காணாமல் நேரே டில்லி செல்கிறான். சாவித்திரியின் மாற்றாந் தாய் பிரேமா. அவளின் கலாசாலைத் தோழன் ஓவியன் ராஜன்! அவன் தங்கை சரசாவுடன் பிரேமாவின் வீட்டில் வந்து தங்குகிறான். ராஜனின் அழகும், அவன் வரையும் கண்கவர் சித்திரங்களும் சாவித்திரியின் சிந்தையைக் கவர்கின்றன. ராஜனும் சாவித்திரியின் வனப்பில் மயங்குகிறான். மனதை மயக்கும் சூழ்நிலையில் இருவரும் ஒன்று கலந்து விடுகின்றனர். அதன் பலனாகச் சாவித்திரி கர்ப்பமுறுகிறாள். தன் பாபச் செயலை உணர்ந்த சாவித்திரி மனம் வருந்துவதைக் காணச் சகியாத ராஜன், ஊர் ஊராக நாடோடி போல் சுற்றுகிறான். ஒருநாள் மாலை டில்லியின் ஒரு தெருவழியே சென்று கொண்டிருந்த போது, சுகுமாரனின் காரில் அகப்பட்டுக் கொள்ளுகிறான். கார் விபத்தில் காலை இழந்த ராஜனுக்கு சுகுமாரனே சிகிச்சை செய்கிறான். சுகுமாரன், ராஜனின் வரலாற்றைக் கூறும்படி கேட்க, ராஜன், சாவித்திரியின் கற்பைக் கெடுத்த விதத்தைக் கூறி

வருந்தும் போது சுகுமாரனே சாவித்திரியின் கணவன் என்பதை அறிந்து காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டு போய்விடுகின்றான். தன்மனைவி கெடுக்கப்பட்டாள் என்பதை அறிந்த டாக்டர் சுகுமாரன் மனந்துடித்தாலும், கடைசியில் சாவித்திரி தவறியதற்கு "தன் இளமனைவியின் உள்ளத் தாபத்தைத் தணிக்காது பல ஆண்டுகள் அவளைப் பிரிந்திருந்த தானே காரண"மென்பதை உணர்ந்து சாவித்திரியை மன்னிக்கின்றான். ஆனால் சாவித்திரி எதிர்பாராத விதமாக டாக்டர் சுகுமாரனைச் சந்திப்பதால் மூர்ச்சையுறுகிறாள். மூர்ச்சையுற்று இறக்கும் தருவாயில் சுகுமாரனையும் ராஜனின் தங்கை சரசாவையும் ஒன்று சேர்த்துவிட்டு உயிர்விடுகிறாள். இது தான் கதை. மத உணர்ச்சியற்றவனும், மானமுள்ளவனும் உத்தம, குணம் வாய்ந்த மன்னிக்கும் இயல்புள்ளவனே 'மனிதன்' என்ற கருத்து மக்களுக்கு இந்நாடகத்தின் மூலம் புகட்டப்படுகின்றது.

புரட்சிகரமான இந்நாடகத்தின் முடிவை, கொஞ்சம் புரட்சிகரமாக மாற்றியமைத்திருக்க வேண்டும் என்பதே என் அபிப்பிராயம். சுகுமாரன் சாவித்திரியை மன்னித்து அவளை ஏற்றுக்கொள்வதாகக் காட்டியிருந்தால் மிகவும் நல்ல முடிவாயமைந்திருக்கும் இம்முடிவை மிகத் தைரியமாகக் காட்டியிருக்கலாம். ஒருவேளை 'இந்து சமூகம்' ஒப்புக்கொள்ளுமோ என்ற சந்தேகத்தால், சாவித்திரியை இறக்கவைத்து, சரசாவையும் சுகுமாரனையும் ஒன்று சேர்த்திருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை! அடுத்தாற்போல் மூர்ச்சை அடைந்து விட்ட சாவித்திரி மறுபடியும் மூர்ச்சை தெளிந்து சுகுமாரனையும் சரசாவையும ஒன்று சேர்த்துவிட்டு இறப்பதென்பதையாராலும்நம்பமுடியவில்லை. சாவித்திரி மூர்ச்சை அடைந்து இறந்து விடுவதாகக் காட்டிப் பின்பு சரசாவைச் சுகுமாரன் காதலித்து மணம் புரிவதாகக் காட்டியிருக்கலாம். அல்லது நான் மேலே கூறியபடி சாவித்திரி மூர்ச்சை தெளிந்ததும், சுகுமாரனால் ஏற்றுக் கொள்ளப்படுவதாகக் காட்டியிருக்கலாம்.

ராஜனின் கலாசாலைத் தோழி பிரேமாவின் பாத்திரத்திற்கு வேறொரு பெண் நடிகையைப் போட்டிருக்கவேண்டும்! இந்த பிரேமாவின அழகிலோ, ராஜன்மனத்தைப் பறிகொடுத்தான் என்ற சந்தேகம் ஏற்படுகின்றது; பெண்களின் பாத்திரங்களுக்குப் பெண்களைப்போடுவதால் நாடகத்தில் கவர்ச்சி அதிகரிக்கும் என்பது என் கருத்து.

நடிப்பு

ஓவியன் ராஜனாக வரும் திரு. டி. கே. ஷண்முகம் அவர்கள் தமிழ் நடிகர்களுக்குள்ளேயே தலைசிறந்தவர் என்பது யாவரும் ஒப்பமுடிந்த உண்மை. டாக்டர் சுகுமாரன், சாவித்திரியின் கணவன் என்பதை அறிந்து சுகுமாரனிடம் மன்னிப்புக் கோருமிடத்தில், நடிப்பின் உச்சநிலையையே அடைந்து விடுகின்றார்! மறக்க

முடியாத மனத்தை உருக்கும் கட்டம் இதுதான்! சில காட்சிகளில் நகைச் சுவையோடும் நடித்து நாடகம் பார்ப்பவர்களிடையில் நகைப்பையுண்டு பண்ணுகின்ருர் ஷண்முகம். டாக்டர் சுகுமாரஞக நடிக்கும் திரு. பகவதி டாக்டருக்கு வேண்டிய பொறுமையும் சாந்தமும் பொங்க அசல் டாக்டராகவே நடிக்கின்ருர்! மற்ற நாடகங்களைவிட இதில் தான் திரௌபதியின் உன்னதமான நடிப்பைக் காணமுடிகிறது! சோகக்கட்டங்களில் அவர் நடிப்பைக்கண்டு நம்மையுமறிடாமல் கண்ணீர் வந்துவிடுகின்றது. 'பிரண்டா'க வரும் ராமசாமி இடையிடையே நகைப்பை உண்டுபண்ணுவதோடன்றி, அன்ருட நிகழ்ச்சிகளைச் சந்தர்ப்பத்துக்கேற்றவாறு புகுத்தி வயிறுகுலுங்கச் சிரிக்கவைக்கிருர்.

நாடகத்தில், கடலில் கப்பல் செல்லுவதும், ரயில் ஓடுவதும் விமானம் பறப்பதும், மோட்டார் போவதும் தத்ரூபமாகக் காட்டுகிருர்கள்.

மூடப்பழக்க வழக்கங்களால் புரையோடிப்போன நம் சமூகத்திற்கு இது போன்ற நாடகங்களே தேவை! அத்தகைய நாடகங்களை மேன்மேலும் நடித்துக்காட்ட டி. கே. எஸ். சகோதரர்கள் முயற்சிப்பார்களாக.

—சி. கே. ராதாகிருஷ்ணன்